# கலை உள்ளம்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.

ஓவியப் புலவர்

**திருமதி. சி. பெரியநாயகி**

அண்ணாமலைநகர்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

**பழனியப்பா பிரதர்ஸ்**

சேப்பாக்கம், சென்னை-5 :: தெப்பக்குளம், திருச்சி - 2

*Univ. Grants Commission.*

முதற் பதிப்பு : 1954
இரண்டாம் பதிப்பு : ஜூன் 1956

Approved by the T.B.C. Vide Consolidated List
Page 24 Dated 4-4-56.

விலை ரூ. 1-4-0

அச்சிட்டோர்
மாருதி பிரஸ்,
சென்னை.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்
**திரு. ரா. பி. சேதுப்பிள்ளை,** *பி.ஏ., பி.எல்.*
*எழுதிய*

# முகவுரை

நவமணிகள் பதித்த ஒரு நல்லணி போன்றது 'கலை உள்ளம்' என்னும் இந்நூல். இந்நூலாசிரியருக்குக் கவின் கலைகளில் உள்ள ஆர்வமும் பழந்தமிழ் நூல்களிலுள்ள பயிற்சியும் நூல் முழுவதும் விளங்குகின்றது. ஆடைகள் உடுப்பது ஒரு கலை; அணிகள் புனைவது ஒரு கலை; கண்ணிறைந்த ஓவியம் தீட்டுவது ஒரு கலை; பண்ணமைந்த பாட்டிசைப்பது ஒரு கலை; பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்ப்பது ஒரு கலை. பின்னலும் கலை; துன்னலும் கலை. எனவே, வாழ்க்கை முழுவதும் கலையின் வண்ணமே என்பதை நன்கு எடுத்துக் காட்டுகின்றது இந்நூல். இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை யாதலால் மனையகம் கலையகமாகத் திகழ்வதற்கு மாதர் கலையுள்ளம் உடையராதல் வேண்டும் என்பதே இந்நூலாசிரியரின் குறிக்கோள். இதனாலேயே நாணமும் மடனும் நாரியர்க்கு அழகு என்னும் மடக் கொள்கையை மறுத்து மாதவம் செய்தவரே மங்கையராய்ப் பிறப்பர் என்னும் கருத்தை ஆதரிக்கின்றார் இந்நூலாசிரியர். கணவனோடு கலைகளையும் பேணி வளர்க்கும் உரிமை பெண்களுக்கு உண்டு என்று இனிய எளிய தமிழில் எடுத்துரைக்கும் இந்நூலைத் தமிழ் நாடு வரவேற்று நூலாசிரியரை ஊக்குவிக்கும் என்று நம்புகின்றேன்.

சென்னை,
25—11—'54.

**ரா. பி. சேதுப்பிள்ளை**

# முன்னுரை

இப் புத்தகத்தில் அடங்கியுள்ள கட்டுரைகளிற் பல திருச்சி வானொலி நிலையத்தின் வழியாக என்னாற் பேசப்பட்டவை. வானொலி நிலையத்தார் அவற்றைத் தொகுத்துப் புத்தக வடிவில் வெளியிட்டுக் கொள்ள இணங்கியதற்காக அவர்கட்கு நன்றி செலுத்துகின்றேன்.

இப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகளிற் பெரும்பாலனவற்றில் கலையுள்ளமே தென்படக் காணலாம். அதனால், இதற்குக் "கலையுள்ளம்" என்றே பெயரிடப்பட்டது.

அண்ணாமலை நகர்,
15—8—'54.

சி. பெரியநாயகி

## உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| 1. | ஆடையும் அணியும் | ... | 1 |
| 2. | அலங்காரம் | ... | 9 |
| 3. | தையலும் தையலும் | ... | 22 |
| 4. | வீட்டிற் கலை | ... | 30 |
| 5. | பொழுது போக்கு | ... | 43 |
| 6. | குழந்தை உள்ளம் | .... | 52 |
| 7. | நாணமும் மடமும் | ... | 62 |
| 8. | இல்லறம் | ... | 69 |
| 9. | ஓவியமும் மன அமைதியும் | ... | 77 |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# 1. ஆடையும் அணியும்

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே அழகுணர்ச்சி வளர்ந்து வந்திருக்கிறது. அழகுணர்ச்சி தமிழருக்குப் புதியது அன்று. பண்டைத் தமிழன் இறைவனை அழகின் வடிவமாகக் கண்டவன். முருகு என்பது அழகு. முருகன் என்பவன் தமிழனின் தெய்வம். இறைவன் அழகின் வடிவம் என்று கருதியதற்குக் காரணம் உண்டு. இயற்கையோடு ஒன்றி, இயற்கையோடு வாழ்ந்த மனிதன், இயற்கையில் அழகு மண்டிக் கிடப்பதைக் கண்டான். அழகிய உணர்ச்சி, அழகிய செயல் ஒருவனுக்கு உண்டாக வேண்டுமென்றால், அவனும் அழகுடையவனாகவே இருக்கவேண்டும். அந்த அழகே இறைவடிவம் என்று எண்ணினான்.

இத்தகைய அழகு மனிதனைக் கவர்ந்தது அவன் இயற்கையை இன்னும் அழகுபடுத்த

விரும்பினான். ஆகவே, அலங்காரத்தில், உடையில், வீட்டில், உணவருந்துவதில் அழகுணர்ச்சி தோற்றுவிக்க முற்பட்டான். உலகமே அழகின் மயமாகத் தோன்றவேண்டும் என்பது உயிர்களின் விருப்பம். அழகு கண்களுக்கு மட்டும் விருந்தளிக்கிறது என்ற நிலையில் நாம் பார்த்தால், அது இன்றியமையாதது என்று கொள்ள முடியாது. அழகு, உள்ளத்தைத் பண்படுத்துகிறது, சிறந்த பண்பாட்டைக் காட்டுகிறது என்பதால், அது தேவையானது என்பதை அறிகிறோம்.

அழகு செய்ய விலையுயர்ந்த ஆபரணங்கள், சரிகை வேலைப்பாடு நிறைந்த உடைகள் தேவை எனச் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு. அழகு என்பது விலையுயர்ந்த பொருட்களை நிறைய அணிந்துகொள்ளுவதால் பெறப்படுவது அன்று. ஓர் அழகிய பனாரிஸ் புடவை அல்லது நல்ல விலையுயர்ந்த கரையுடன் கூடிய டாக்காப் புடவை அணிவதில் எவ்வளவு பொலிவு ஏற்படுகிறதோ, அவ்வளவு பொலிவு ஒரு சாதாரண வாயில் புடவையை முறைப்படி அணிவதனாற் பெறலாம். ஆகவே, அழகு செய்வதற்கு அழகுணர்ச்சி எல்லாருக்கும் தேவை.

உடை அணிவதில் அழகு ஏற்படவேண்டுமானால், நாம் சில காரியங்களை நன்றாகக் கவனிக்க வேண்டும். காலம், முறை, உடல்நிலை, சாயல் என்பன அவற்றுள் சிறந்த இடம் பெறுபவை.

## ஆடையும் அணியும்

காலத்திற்கும் உடை அணிதலுக்கும் என்ன தொடர்பு இருக்கமுடியும் என்று சிலர் எண்ணலாம். நன்ருக ஆராய்ந்து பார்த்தால் எளிதில் புரிந்துவிடும். சித்திரை மாதம். கடும் வெயில். இதிலே நாம் ஒரு கறுப்புப் புடவையை அணிந்து கொண்டால் எவ்வாறு இருக்கும்? முகப்பொலிவு மறைந்துவிடும். ஆகையால் அக்காலத்திற்கு ஏற்றது மெல்லிய, பகட்டில்லாத புடவைதான். அது காலத்திற்கு ஏற்ப அழகாகவும் இருக்கும்; உடம் பிற்கும் நல்லது. இம்முறையைப் பழங்கால மகளிர் கையாண்டனர் என்பதைச் சிலப்பதி காரத்தினின்று அறிகிருேம். காலத்திற் கேற்ற உடை அணிந்ததோடு அமையாது, காலத்திற் கேற்ற மலரையும் அணிகின்ற ஒரு செம்மை வாய்ந்த பழக்கம் உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை, இளங்கோவடிகள் மதுரை மகளிரைப் பற்றிக் கூறுமிடத்துக் காணலாம். வாடைக் காலத் திற்கேற்ப மகளிர் அரத்தப் பூம்பட்டை அணிந் திருப்பதாகக் கூறுகின்ருர். புகார் நகரத்து மகளிர் பகலில் பட்டு உடுத்தி யிருந்தவர்கள் இரவில் பருத்தியாடை அணிந்திருந்தார்கள் எனப் பட்டினப் பாலை கூறுகின்றது.

காலத்திற்கேற்ற ஆடையென்று கூறுகின்ற பொழுது, சந்தர்ப்பத்தையும் நாம் மறந்துவிட முடியாது. மழை பெய்ததினுல் தெருவில் சேறு நிறைந்துள்ளது என்று வைத்துக் கொள்ளுவோம்.

அப்பொழுது அழகிய பூவேலை செய்த சிலிப் பர்ஸ் அணிந்து சென்ருல் அது அழகாகுமா ? வீட்டைச் சுத்தமாக்கும் பொழுது மெல்லிய விலையுயர்ந்த ஆடையை அணிந்து கொள்ளுவது அழகின் பிரதிபலிப்பாகாது. நோயால் பீடிக்கப்பட்டிருக்கும் ஓருவரைக் காணச் செல்லும்போது ஆடம்பரமாக உடை உடுத்திச் செல்லுவது முறையா ? இத்தகைய ஆராயாத செயலால் அழகிய பொருட்களும் சந்தர்ப்பத்திற்கேற்பத் தம் அழகை இழந்து விடுகின்றன.

இரண்டாவது அணிகிற முறை. இந்த முறையைப்பற்றி நம் நாட்டுப் பெண்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நமக்கென்று ஒரு நாகரிக முறை இருக்கின்றது. அதனை உலகம் போற்றுகிறது. 12 முழம் முதல் 18 முழம் வரை உள்ள ஒரு நீளப் புடவையை உடம்பில் வளைய வளையக் கட்டுவதே அவ் வழக்கம். இந்த முறையைக் காலத்திற் கேற்பவோ, சந்தர்ப்பத்திற் கேற்பவோ மாற்ற வேண்டிய தேவை கிடையாது. ஆகையால், இங்கே நான் முறை என்று சொல்லும்போது புடவைக்கேற்ப மேற் சட்டையைத் தேர்ந்தெடுக்கும் முறையையே குறிப்பிடுகிறேன்.

உடை அணியும்பொழுது பொலிவுதோன்ற வேண்டுமானுல், புடவையும் மேல் சட்டையும் ஒன்றுடன் ஒன்று பொருந்தி யுள்ளனவா என்பதை நன்கு ஆராய்தல் வேண்டும். முதலாவதாக,

துணியின் தராதரத்தை அறியவேண்டும். ஒரு முரட்டு நூல் சட்டை அழகிய மெல்லிய பட்டுப் புடவையுடன் ஒத்துப்போவதில்லை. அது போலவே ஒரு வெல்வெட் சட்டை ஒரு நூற் புடவையுடன் ஒத்துப் போவதில்லை. ஆகவே, இவைகளைத் தேர்ந்தெடுப்பதில் அழகுணர்ச்சியை நாம் அதிகமாகக் கொள்ளுதல் வேண்டும். நிறத்திலும் இப் பொருத்தம் தேவை. புடவைக் கரை, தலைப்புகளுக்கேற்பச் சோளியையோ ஜம்பரையோ தேர்ந்தெடுப்பது ஒரு தனிக் கலை. அதை நாம் நன்றாக அறிந்து பயன்படுத்த வேண்டும்.

மூன்றாவது தோற்றம். தோற்றத்தைப் பற்றிய ஒரு நல்ல அறிவு நமக்கு வேண்டும். தோற்றத்தை இருவகையாகப் பிரிக்கலாம்: உருவம் என்றும், நிறம் என்றும்.

சிங்கத்திற்குப் பிடரி மயிர் அழகைக் கொடுக்கிறது; அதுபோலவே மயிலுக்குத் தோகை. சிங்கத்திற்குத் தோகையும் மயிலுக்குப் பிடரி மயிரும் மொட்டை வாலும் இருந்தால் எப்படியிருக்கும்? இயற்கை எத்தனை பொருத்தமாக அமைந்துள்ளது! ஆகையால், நாம் இயற்கையாக உள்ள பருமனுக்கும் நிறத்திற்கும் ஏற்றாற்போல் உடை அணிய வேண்டும்.

குள்ளமாயும் சற்றுப் பருமனாயும் இருப்பவர்கள் பெரும் பூக்கள் போட்ட அல்லது பெரிய குறுக்குக்கோடு போட்ட அழுத்தமான உடைகளை

அணிந்தால் பார்ப்பதற்கு விகாரமாக இருக்கும். அத்தகையவர்கள் மெல்லிய, உடம்போடு தழுவி நிற்கும் புடவைகளைச் சற்றுத் தொங்கலாக அணிந்தால், உயரமான மெல்லிய தோற்றத்தைப் பெறுவார்கள்.

விரும்பத்தக்க உயரத்தோடு அழகிய தேகக் கட்டுடையவர்களுக்கு எந்த உடையும் அழகுடன் பொருந்திவிடும். மிகவும் நெட்டையாக இருப்பவர்கள் குறுக்குக் கோடு ஜம்பரும் அதற்கேற்ற சற்று அழுத்தமான புடவையும் அணிந்து கொண்டால் தேவையான உயரந்தான் உள்ளவர் போலக் காணப்படுவார்கள்.

குள்ளமாக இருக்கிறவர்கள் கோடு போட்ட ஜம்பர் அணிய விரும்பினால், கோடுகளை நீள வசத்தில் அமைத்துக் கழுத்துப் பகுதியைச் சற்றுத் தாழ வெட்டித் தைத்து அணிய வேண்டும். மிகவும் மெல்லிய தோற்றமுடையவர்கள் ஜார்ஜட், நிஞன் போன்ற புடவைகளைத் தவிர்த்துச் சற்று அழுத்தமான கரையுடன் கூடிய புடவைகளை அணிந்தால், எடுப்பாக இருக்கும்.

அடுத்தது நிறம் அல்லது சாயல். உடையானது அணிபவர்களின் நிறத்தோடு பொருந்தி இருத்தல் வேண்டும். இதை மிகச் சிலரே கையாளுகின்றனர். திருமணக் காலங்களிலே சிவப்புப் புடவை அணியவேண்டும் என்ற கொள்கையுடைய

வர்கள் அதிகமாகக் கறுப்பு நிறமுடைய ஒரு பெண்ணுக்கு நிறைந்த சரிகை வேலைப்பாடுடைய ஓர் அழுத்தமான அரக்கு நிறப் புடவையை அணிவிக்கின்றனர். அதனால், பெண்ணின் இயற்கையழகும் மறைந்து விடுகின்றது. ஆகையால் கறுப்பு நிறமுடையவர்கள் கூடியவரையில் மங்கலான நிற உடை அணிவது நல்லது.

பொன் நிறம் உடையவர்கள் எந்த நிற உடை அணிந்தாலும் பொருத்தமாக அமைந்துவிடும். அவர்கள் மெல்லிய மங்கலான நிறத்தில் புடவை அணிகின்ற காலத்து, அதே நிறத்தில் இன்னும் சற்று ஆழ்ந்த நிறமுடைய ஜம்பரையோ அல்லது சோளியையோ அணிந்து கொள்ளுவார்களேயானால் அழகாக இருக்கும்.

ஆடையென்று கூறுமிடத்து, அணிகளை முற்றிலும் தவிர்த்துவிட முடியாது. உடையோடு அணிகலன்களும் பொருந்தி யிருத்தல் வேண்டும். நல்ல வெண்பட்டுப் புடவைக்கு ஒரு முத்து மாலையும், முத்து வளையும், முத்துத் தோடும் அழகாகப் பொருந்திவிடுவன. இந்த முறை பழைய காலத்திலிருந்து கையாளப்பட்டிருக்கிறது. அரத்தப் பூம்பட்டு அணிந்து பவள மாலையையும் சிவந்த மலரையும் சூடிய பெண்களை இலக்கியங்களிலே காண்கின்றோம்.

அண்மையில் நடந்த அழகுப் போட்டியில் சென்னையில் வெற்றி பெற்ற அழகு ராணி

எவ்வாறு அழகுணர்ச்சி தோன்ற ஆடை அணிந்திருந்தாள் என்பதைப் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம். நிறைய சரிகை வேலைப்பாடு நிறைந்த புடவைகளுடன், கோவிலில் அம்மனுக்குச் சாத்துவதுபோல் நிறைந்த ஆபரணங்களைச் சுமந்து கொண்டு அங்கே யாரும் போட்டியிட வரவில்லையென அறிகின்றோம். அழகு ராணி அணிந்த உடை எளிது ; அணிகளும் அவ்வாறே. ஆனால், அவை பொருத்தத்துடன் அழகு நிறைந்தவை. ஒரு முத்துமாலை, வெள்ளி ஸ்டடு, புன்னகை இவ்வளவே அவர் கொண்டவை.

ஆகவே, நம் நிலை, நாட்டு நிலை, காலம், தோற்றம் முதலியன அறிந்து அவற்றிற் கேற்பச் சற்று முயற்சியுடன் பொலிவு தோன்றும்படி ஆடை அணியும்போது மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படுகின்றன என்பது மெய் அன்றோ ?

## 2. அலங்காரம்.

மனிதன் உலகின் அழகைக் கண்டான். இயற்கையின் அழகு அவன் உள்ளத்தை மயக்கிற்று. அந்த நிலையில் இன்பத்தை யளிக்கும் சக்தி அழகிற்கு உண்டென்பதைக் கண்டுபிடித்தான். ஆனாலும் அலங்கரித்துக்கொள்ள அவன் அறியவில்லை. ஒரு காலம் : மரங்கள் இலையை உதிர்த்து நின்றன. பச்சைப் பசேலென்றிருந்த பசும்புல் தரை கருகிவிட்டது. ஒலியைப் பரப்பிக்கொண்டு ஓடிய சிற்ருேடை நீரின்றிக் காணப்பட்டது. அவன் உள்ளத்திலே இன்பம் வற்றிவிட்டது. காலம் சுழன்றது. இளந்தளிர் விட்ட மரங்கள் பன்னிற மலர்களைத் தாங்கி நின்றன. பசும்புல் தரையிலே ஒரு தனிக் கவர்ச்சி யுண்டாயிற்று. சிற்ருேடை நீரொலியைப் பரப்பி ஓடத் தொடங்கியவுடன், மனிதன் உள்ளத்திலே இன்பம் பெருகிற்று. அன்றுதான், அவன் இயற்கை

செய்துகொண்ட அலங்காரத்தை உணர்ந்தான். அழகை அனுபவிக்கும் உணர்ச்சியைக் காட்டிலும் சிறந்ததோர் அழகை ஆக்கும் அந்தரங்கத்தை அறிந்தான்.

மலர்களின்றிக் காணப்பட்ட மரத் தோற்றமும், மலர்கள் நிறைந்துள்ள மரத்தின் தோற்றமும் அவன் கண்முன்னே நின்றன. அழகின் இரகசியத்தை அவன் அறிந்து கொண்டான். அம் மலர்களைக் கொய்து, தான் விரும்பிய ஒருவர்மீது சூட்டினான். அங்கே கவர்ச்சியைக் கண்டான். அதினின்று, மலர் ஒரு அலங்காரப் பொருள் ஆயிற்று. இது அலங்கார வரலாற்றின் தோற்றுவாயாக இருந்திருக்க வேண்டும்.

ஆம்; மலர் அன்று முதல் இன்று வரையில் அலங்காரத்தில் இடம் பெறுகிறது. ஆனால், தோற்றத்தின் முதற் பகுதியில் அலங்காரத்தின் தனிப் பொருளாக அது இருந்திருக்க வேண்டும். பண்டை நூல்களைப் படிக்கும் காலையில், அங்கே பூவுடை அணிந்த தலைவியைக் காண்கிறோம். கோட்டுப் பூச் சூடிய ஆயர் சிறுவனைக் காண்கிறோம். நீர்ப் பூ அணிந்த மருத நிலத் தலைவனைக் காண்கிறோம். வெட்சி முதலிய மலர்களை அணிந்த போர் வீரர்களைக் காண்கிறோம். தாரணிந்த மூவேந்தர்களையும் காண்கின்றோம்.

இதற்கும் முந்திய காலத்தில், மலரே தனி அலங்காரப் பொருளாக இருந்த காலத்தில், மக்கள்

ஒரு குறையை அறிந்திருக்க வேண்டும். காலையிலே கொய்து, கூந்தலிலும் மார்பிலும் கைகளிலும் இடையிலும் சூடிக்கொண்ட மலர்கள், மாலையிலே வாடி வதங்கிப் போய்விட்டன. மாலை மலர்கள் காலையிலே கவின் இழந்துவிட்டன. மனித உள்ளம் ஊன்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டது; மலர் போன்ற இயற்கைப் பொருள்களைச் செயற்கையால் அழியாத பொருட்களிலே ஆக்க ஆரம்பித்தது. சங்கும் தந்தமும் அதற்குப் பயன்பட்டன. பின்னர் உலோகங்கள் அதற்குச் சிறப்பைக் கொடுத்தன. இறுதியில் மின்னி ஒளிவிடும் வெள்ளியும், மிளிர்கின்ற ஆடகப் பசும்பொன்னும் பயன்படலாயின. இன்றும், நம் அலங்காரப் பொருளாக இடம்பெறும் அணிகளிற் பல மலர் வடிவத்தில் செய்யப்படுகின்றன. காதில் அணியும் தோடும், கூந்தலில் அணியும் திருகும் மலர் வடிவம் படைத்தவைகள் தாமே?

சில பொருள்கள் பூக்களின் பெயர்களையே கொண்டுள்ளன. மல்லிகை மொக்கு சரம், திருகுப்பூ, தாழம்பூ போன்ற பொருள்கள் இன்னும் மலர்களின் பெயர்களையே தாங்கி நிற்கின்றன.

அலங்காரம் காலத்திற்குக் காலம் வேறுபடுகிறது; இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. அதே சமயத்தில், எந்த நாட்டிலும், மிகுதியான

அலங்காரம் பல்லாண்டுகளாகப் பெண்களின் ஏகபோக உரிமையாக இருந்து வருகிறது.

மொகஞ்சோ-தாராவிலிருந்து கிடைத்த பொருட்களினின்றே பெண்கள் அலங்காரத்திற் பெரிதும் கவனம் செலுத்தியிருக்கிறார்கள் என்று அறிகிறோம். அணிந்துள்ள ஆபரணங்கள், ஆடைகள் முதலியன அவர்கள் இயற்கை அழகைப் பன்மடங்கு பொலிவுறச் செய்வது போலச் சிற்பங்களிலும் சித்திரங்களிலும் காண்கின்றோம்.

நாகரிகம் என்பது என்ன என்று அறியாத காட்டில் வாழும் மக்களும், தங்களைப் பாசி, சங்கு, மலர்கள், ஓலை முதலிய பொருட்களால் அலங்கரித்துக் கொள்ளுகின்றனர்.

தற்காலத்தில் வைரம் இழைத்த காதணி முதல், சாதாரண தங்கக் காதணி வரை, எல்லாம் ஓலை என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் ஓலை என்பது பழங்காலத்திற் சாதாரண பனையோலையால் ஆனது. காலம் செல்லச் செல்ல பனையோலை அணிவது கைவிடப்பட்டது. அதன் இடத்தைத் தங்கம், விலையுயர்ந்த முத்து, கற்கள் முதலியவை எடுத்துக் கொண்டன. சங்கினால் பலவித வளையல்கள் செய்யப்பட்டன. அக்காலத்தில் சங்கு என்றால், வளையலைக் குறிக்கும் அளவு அது உபயோகிக்கப்பட்டது.

கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற்கு முன்னுலே விதவிதமான ஆபரணங்கள் இருந்தன என்பது தெரிகிறது. வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்குவளை மலர்களை ஆடிப்பாடும் விறலியர் என்னும் மகளிர் அணிந்திருந்தனர். ஆர்ப்பமைந்த கடகம், வீரக்கழல் முதலியவை ஆடவரின் அலங் காரப் பொருளாக இருந்தன. கண்ணிற்கு மைதீட்டல் அக்காலத்திலிருந்து இக்காலம் வரை அலங்காரமாகக் கொள்ளப்பட்டு வருகிறது.

சிலப்பதிகாரத்தில், மாதவி தன்னை அலங் கரித்துக் கொண்டதாகக் கூறப்படுகிற பகுதி மிக்க சுவை பொருந்தியதாகும். அவள் அலங்கரித்து முடிந்த நிலையில், அவள் உடலின் சிறு பகுதி யேனும் ஆபரணத்தால் மறைக்கப்படாமலிருந் திருக்க முடியாது. கை விரல்கள் கூட மறையும் படி மோதிரங்கள் இட்டிருந்தாள். இக்கால மகளிர் மார்புப் பக்கமாகச் சங்கிலி, அட்டிகை, காசு மாலை முதலிய ஆபரணங்களை அணிந்து கொள்ளு கிறுர்கள். மாதவியோ முதுகு மறையும்படி, பல கோவைகள் தொங்கவிடப்பட்ட ஓர் அணியையும் அணிந்திருந்ததாக அறிகிறோம்.

அதே நூலில், மிகக் குறைந்த அளவுள்ள அணியையும் மக்கள் விரும்பியிருந்தனர் என் பதற்குக் கண்ணகி ஒரு சான்றாகக் காணப்படுகிறுள்.

அவளால் அணியப்பட்ட அணிகலன்கள் அவளது இயற்கை யழகை மறைத்தன என்று கோவலன் வருந்தினதாகத் தெரிகிறது. கம்பரும், இது பற்றித்தான் "யாரே, அழகினுக்கு அழகு செய்வார்" என்றார். இதிலிருந்து ஆபரணம் அதிகமாக அணிவது அழகாகக் கருதப்படவில்லை; கவர்ச்சி தோன்ற அலங்கரித்துக் கொள்வதே அலங்காரம் என்று எண்ணினார்கள் என்பது விளங்குகிறது.

ஆடையானது ஆபரணத்தைப் போல அலங்காரப் பொருளாகவும் கருதப்படுவதுண்டு. ஒரு புடவை வாங்கினால் அதன் நிறம், கரைக் கட்டு, பளபளப்பு, முன்றானை முதலியவைகளை ஆராய்ந்து வாங்குவது எதற்காக? வித விதமாக ரவிக்கைகளை வெட்டித் தைத்து அணிவது எதற்காக? எல்லாம் அலங்காரத்திற்காகத்தானே? ஆடை மூலமாக அலங்காரஞ் செய்து கொள்வதில், பல நாட்டினர் பல விதமான நிலையில் உடையைத் தைப்பதினால், அலங்காரத்தைப் பெருக்க விரும்புகிறார்கள். ஆனால் மிக்க அழகாகச் சுற்றப்படும் நம் நாட்டுப் புடவையோ அதன் அமைப்பிலே விருத்தியடைகிறது. தலைப்பு, ஓரம், வண்ணம் முதலியவைகளில் வளர்ச்சி ஏற்படுகிறதே ஒழிய, உடுத்துவதில் குறிப்பிடத்தக்க மாறுதல் கிடையாது. பெண்களின் உடலமைப்பிற்கேற்ப, உடை உடுக்கும் சிறந்த அலங்காரக் கலையுணர்வு உடையவர்கள்

இந்தியப் பெண்களே யாவர். மற்ற நாடுகளில் நாகரிகம் மாறலாம். ஆனால், கலை கவர்ச்சிகரமான நிலையில் அமையவில்லை. நம் நாட்டுப் புடவைகளை உடுத்தும் அழகை இன்று உலகமே கண்டு வியக்கிறது என்பதற்குச் சமீபத்தில் மேல் நாட்டில் நடந்த கண்காட்சிச் செய்திகளே சான்றாகும்.

ஒருவரது அலங்காரம், அணிகளுடனும் ஆடைகளுடனும் தீர்ந்து விடவில்லை. உடலையே கவர்ச்சிகரமாக வைக்க வேண்டிய அவசியத்தையும் மக்கள் அறிந்திருந்தனர்.

சிலப்பதிகாரத்தில், மாதவி தன் கூந்தலைப் பத்து வகைப்பட்ட துவர், ஐந்து வகைப்பட்ட விரை, முப்பத்திரண்டு வகை ஓமாலி முதலியவைகள் ஊறின நன்னீராலே கழுவி, வாசனைப் புகையூட்டிக் கஸ்தூரி, சவ்வாது கலந்த தைலம் ஊட்டினாள் எனக் கூறப்பட்டிருக்கிறாள். இது கூந்தலுக்கு வழுவழுப்பான ஒரு கவர்ச்சியைக் கொடுப்பதற்கேயாம்.

நகத்திற்கு மருதாணி பூசுவது, கண்ணுக்கு மை தீட்டுவது, காலுக்குச் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டுவது முதலிய வழக்கங்களும் அலங்காரத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

முகத்திற்குப் பவுடர் பூசுதல் தற்கால நாகரிகப் பெண்மணிகளின் வழக்கம் என்று தவறுதலாகக்

கூறுகிறார்கள். இவ்வாறு பூசப்படும் வண்ணம் பூம்புகாரில் விற்கப்பட்டதாகச் சிலப்பதிகாரத்திற் காண்கிறோம். சீவக சிந்தாமணியில் சுண்ணம் பெண்களுக்கு அலங்காரப் பொருளாக விளங்கியது என்று கூறப்படுகிறது. இராமாயணத்தில், சீதையின் மணக்கோலத்தைப் பற்றிப் படித்துப் பார்த்தால், அவளுக்குச் சுண்ணமும், வாசனைப் பொடியும், பூந்தாதுக்களும் அப்பி விடப்பட்டன என்பதைக் காண்கிறோம்.

உதட்டிலும் நகத்திலும் சாயம் பூசிக்கொள்ளும் ஒரு வழக்கத்தை இப்பொழுது நாம் சில விடங்களிற் பார்க்கிறோம். இந்த வழக்கம் மேனாட்டிலிருந்து படித்துக் கொண்டது என்று கருதுவதும் தவறே. ஒருவேளை, உபயோகிக்கப் படுகின்ற பொருள், மேனாட்டுச் சரக்காக இருக்கலாம். ஆனால், வழக்கம் நம் தமிழ்நாட்டில் முன் அறியப்படாதது அன்று. இந்தச் சாயம் தீட்டும் வழக்கத்தைச் சிந்தாமணியில், இலக்கணையார் இலம்பகத்திற் காணலாம். அலத்தகம் என்னும் செம்பஞ்சுக் குழம்பைக் கால், உள்ளங்கை, இதழ், நெற்றி, நகம் முதலியவைகளின்மேல் விருப்பம் போலப் பூசுவித்து மணப்பெண்ணைக் கோலம் செய்தனர் என்று கூறுகிறார் ஆசிரியர்.

மஞ்சளைப் பூசிக் குளிப்பது அலங்காரமாகக் கருதப்படுகிறது நம் நாட்டு மக்கள் பலரால்.

இதைத்தான், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சூரிய காந்தி மலரை ஒரு பெண்ணாக உருவகித்து, "மஞ்சள் குளித்து முகம் மினுக்கி— இந்த மாயப்பொடி வீசி நிற்கும் நிலை" என்றவிடத்துக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆடை, அணி, மை, மஞ்சள், தைலம், சுண்ணம், செம்பஞ்சுக் குழம்பு இவற்றோடு அலங்காரம் முடிந்து விட்டதா? அதுதான் இல்லை. இன்னும் பற்பல வண்ண மலர்கள் இடம் பெறுகின்றன. பண்டைச் சித்திரங்களையும் சிற்பங்களையும் பார்ப்போம். அங்கே பெரும் பகுதியாகத் தாமரை மலர்களே தென்படுகின்றன.

இந்த மலர்களை வித விதமாகக் கொண்டையில் முடித்து, வித விதமாக அணிவது நம் நாட்டின் ஒரு தனிக் கலையாகும். காலத்திற்குக் காலம் வேறுபட்ட மலர்களைத் தேர்ந்தெடுத்துப் பயன் தோன்ற அணிவது நம் நாட்டுக் கலை. இக் காலத்தில், இது பெரும்பான்மையாக அனுசரிக்கப் படாவிடினும், பண்டைத் தமிழராற் பெரிதும் அனுசரிக்கப்பட்டது.

சீவக சிந்தாமணியிலே, முத்தி யிலம்பகத்தில், முன்பனிக் காலத்தில் தம் ஐம்பாலாகிய கூந்தலிலே மல்லிகை மாலையையும் அதனருகே வாகை மாலையையும் வைத்தவர்கள், இளவேனிற்

காலத்திலே கூந்தலைத் திரட்டி முடித்துக் கழுநீர் மாலையையும் அதைச் சுற்றிக் குவளையையும் அணிந்தார்கள் என்று கால வேறுபாட்டிற்கேற்ப, மலரை வேறுபடுத்திச் சூடும் வழக்கம் காட்டப் பட்டிருக்கிறது.

கதம்பமாக, மலர்களை அணிகின்ற வழக்கம் சிலப்பதிகார காலத்திலேயே இருந்திருக்கிறது. மதுரைப் பெண்கள் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதலியவற்றை முத் தாரங்களுடன் தொடுத்து அணிந்தார்கள் என்பது கூறப்பட்டிருக்கிறது.

மேலும், உடைக்கேற்ப மலர்களை அணி கின்ற வழக்கமும் அக்காலத்தில் உண்டு. கூடல் மகளிர் கோலங் கொண்டதைக் கூறும் ஆசிரியர் ஓரே சிவப்பு மயமாக ஒன்ரேடு ஒன்று பொருந்து கின்ற வகையில் ஒப்பனை செய்யப்பட்டதாகக் கூறுகிருர்.

இதுவரை, பண்டைக்கால அலங்கார முறை களைப் பார்த்தோம். இனிமேல், தற்காலத்தில் அலங்காரம் எந்த நிலையிலிருக்கிறது என்று பார்ப் போம்.

தங்களை அலங்கரித்துக் கொள்ளவேண்டும் என்னும் எண்ணத்துடன் உடலை வருத்திக்கொள் ளும் எத்தனையோ மக்களைப் பார்க்கிருேம். தமிழ் நாட்டின் சில பாகங்களிலும், கன்னட தெலுங்குப்

பிரதேசங்களிலும் காதை வளர்த்தல் என்னும் வழக்கம் உண்டு. காதை நன்ருகக் கீறிவிட்டு, பெரிதாக்கிக் கனமான குழைகளை அணிதல் ஆகிய இவ் வழக்கம் இப்பொழுது கைவிடப்பட்டு வருகிறது. காதிலே எண்ணிக்கை நிறைந்த துளைகளையிட்டுக் காது நிறைய அணிகளை நிறைத்துக்கொள்ளும் ஒரு வழக்கம் முஸ்லீம் பெண்கள் சிலரிடையே காணப்படுகிறது. அது போலவே, பச்சை குத்திக் கொள்வதும் வேறு சிலரிடத்தே காணப்படுகிறது.

மணிக்கட்டிலிருந்து முழங்கைவரை தளையிட்டது போல, பெரிய கண்ணுடி அல்லது வெள்ளி வளையல்களை அழுக்கடைந்த நிலையில் அணிந்து கொள்ளுகிற மக்களைத் தமிழ் நாட்டிற்கு வட வெல்லையில் காணலாம்.

அணிகள் அணிவது அலங்காரத்திற்காக என்று நினைக்காமல், அணிகாய்க்கும் மரங்கள் போலக் காட்சியளித்து, தம்மை அலங்கோலம் செய்துகொள்ளும் மகளிர் சிலரின் நிலை இரங்கத் தக்கது.

இன்றைக்கு அலங்காரப் பொருட்களாக சோப்பு, தைலங்கள், முகப் பசைகள், சுண்ணம், மை, நகச் சாயம், உதட்டுச் சாயம், ஆடை, அணிகலன்கள், மலர்கள் முதலியன அமைந்திருக்கின்றன. சிறந்த வேலைப்பாடுள்ள விலையுயர்ந்த

அணிகலன்களை மிகவும் குறைந்த அளவிற்கே அணிந்து, குறைந்த வேலைப்பாடுள்ள ஆடையை இனிமையாக உடுத்தி, மை தீட்டி, சில மலர் சூடி, மிக்க எழிலுடன் விளங்கும் அநேகரைக் காண்கிறோம். அவரவருடைய நிலை, தோற்றம் முதலியவற்றிற்குப் பொருந்தும்படி எழிலுணர்ச்சியுடன், தம் அலங்காரத்திலே மற்றவர்கள் குறை கண்டு எள்ளி நகையாடும் வழியில் அல்லாமல், நல்ல வகையில் அலங்காரம் செய்து கொள்ளுவதே சிறந்த முறையாகும்.

இப்பொழுது உபயோகத்திற்காக உள்ள கைக் கடிகாரமானது அலங்காரப் பொருள்களுள் ஒன்றாக மதிக்கப்படும் நிலை வந்துவிட்டதே என இரங்குகிறேன். இடது கை நிறையப் பல கல்லிழைத்த வளையல்களுக்கு இடையே கனமான பொன் சங்கிலியொடு கிடக்கும் கைக்கடிகாரம் உபயோகத்திற்கா அழகிற்கா எனச் சிலர் சிந்திப்பதே இல்லை.

அலங்காரம் உண்மையான அலங்காரமாகத் தோன்ற வேண்டுமானால், மற்றவர்களுக்குத் தன் செல்வச் சிறப்பைக் காட்ட வேண்டும் என்னும் செருக்குத் தோன்றும் பொருட்டு, அணிவது ஒழிய வேண்டும். எழிலுணர்ச்சி தோன்ற அணிவது பெருக வேண்டும்.

அலங்காரம் செய்து முடித்த பின் திருஷ்டிப் பட்டு விடுமோ என்று அஞ்சி, ஒரு பொட்டிட்டுக்

கொள்ளுவதுண்டு. இந்தத் திருஷ்டிப் பரிகார மானது, இன்று அலங்காரப் பொருளாக மட்டும் அல்லாமல், மங்கலப் பொருளாகவும் விளங்குகிறது. முகத்தின் சிறுமை பெருமைக் கேற்பவும், நிறத் திற்கு ஏற்பவும் திலகம் இடுவதுதான் விரும்பத் தக்கது.

அலங்காரம் முடிந்துவிட்டது என்று யார் சொன்னாலும் நாம் நம்புவது கிடையாது. நம் அலங்காரத்தை நாமே ஒருமுறை பார்த்தால்தான் திருப்தி ஏற்படும். நிலைக்கண்ணாடி முன் போய் நிற்போம். கண்ணாடி இல்லாத வீடு இல்லவே யில்லை. ஆகவே, அலங்காரத்திற்கு வேண்டிய பொருட்களில் ஒன்ருகக் கண்ணாடி இடம் பெற்று விட்டது.

இத்தனை அலங்காரமும் எதற்கு? நாம் அனுபவிக்கவா? இல்லை. அவற்றைப் பிறர் கண்டு மகிழத்தான். இந்த உண்மை தமிழ் நாட்டுப் பெண்டிர் தங்களின் கூந்தலை வித வித மாகப் பின் பகுதியில் முடித்து மலர் சூடிக் கொள்ளுவதில் வெளியாக வில்லையா? அந்த அழகைப் பிறர்தானே பார்க்க முடியும்?

எனவே, காலத்திற்கும் இடத்திற்கும் சூழ் நிலைக்கும் ஏற்பவே அலங்காரம் செய்து கொள்ளு தல் தக்கதென்பது அறியப்படும்

## 3. தையலும் தையலும்

தையல் என்னும் சொல்லுக்குப் புனைதல் என்பது பொருளாகும். இது நுண் கலைகளுள் ஒன்று. கலை உணர்ச்சியும் அழகுணர்ச்சியும் இதற்குத் தேவை. தைத்தல் என்று சொல்லும் பொழுது இரண்டு கருத்துக்கள் தோன்றுகின்றன. ஒன்று அழகு பெற வண்ணமும் வடிவமும் தீட்டப் பட்ட துணிகளை அணிவோர் அளவிற் கேற்ப வெட்டிப் பொருத்துதல். மற்றது பல வண்ண நூலும், மணியும், பாசியும் கொண்டு துணிகளில் வேலைப்பாடு செய்தல். முந்தியது வாழ்க்கைக்குத் தேவையானது. பிந்தியது மக்கள் அழகுணர்ச்சியை யும் கலை உணர்ச்சியையும் பெருக்கி மகிழ்விப்பது.

உடைக்கேற்பத் துணிகளைத் தேர்ந்தெடுப் பது ஒரு கலை. பின், துணியை அணிவோரின்

தோற்றத்தோடு பொருந்த வெட்டித் தைப்பது ஒரு கலை. தையலை வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுகின்ற அநேகருக்கு அது அமைவதில்லை. ஆகவே, அதிலே தேர்ந்த அறிவுடையவர்களை அவர்கள் தேர்ந்துகொள்ளுவது இயற்கை.

வெட்டிப் பொருத்துதற்கு நல்ல தையல் இயந்திரத்தைப் பயன்படுத்தலாம். இது மிக எளிதில் வேலையைச் செய்கிறது. சில காலத்திற்கு முன் காலினாலோ கையினாலோ மனித முயற்சியைக் கொண்டு இயக்கக் கூடிய இயந்திரங்கள் இருந்தன. இப்பொழுது மின் சக்தியால் இயங்கக் கூடிய இயந்திரங்கள் எளிதில் கிடைக்கின்றன. இதைக் கொண்டு ஒரு பெண் தன் குடும்பத்திற்கு வேண்டிய உடையைப் பொழுது போக்காகத் தைத்துக் கொள்ளலாம்.

தன் வீட்டிற்குத் தேவையான உடைகளைத் தானே தைப்பதால் பல நன்மைகள் உண்டாகின்றன. அணிவோரின் அளவிற்கேற்ப, தோற்றத்திற்கேற்ப வெட்டித் தைப்பதால் அணிவோரிடம் ஒரு கவர்ச்சி ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் உள்ள நிறைவு முக எழிலை அதிகமாக்குகின்றது ; பொருள் மிச்சமாகின்றது ; காலம் நல்ல வழியில் செலவாகின்றது. இதனால் ஏற்படும் இன்னொரு பெரிய நன்மையுண்டு. அது தீபாவளி அல்லது பொங்கலுக்கு முந்திய தினம் தையற்காரனின் கடைக்குப் பத்துமுறை வேலைக்காரனை

அனுப்பும் பட்டண வாசிகளுக்குத்தான் நன்றாகத் தெரியும்.

தையற்காரனிடம் தைப்பதற்குக் கொடுக்கும் பொழுது மாதிரி உடை ஒன்றையும் கொடுக்க வேண்டி யிருக்கிறது. அதே அளவில் அதே முறையில் ஓர் உருப்படியைக் கொண்டு வந்து கொடுத்து விடுவான். ஆனால், அவரவரே தைத்துக் கொள்ளும்பொழுது அந்தந்தக் காலத்திற்கேற்ப, முறைக்கேற்ப, புதுப்புது மாதிரியான உடைகளை அமைக்கலாம். புட்களைப்போல் ஓடி விளையாடும் சிறுவர்களுக்கு வித விதமான உடைகள் தைத்து அணிந்து மகிழ்ச்சியடையலாம். வாழ்க்கையில் வசதி யில்லாத பெண்களுக்குப் பொருள் வருவாய்க்கு வழியுண்டு.

ஓர் உடை கொஞ்சம் கிழிந்தவுடன் அதை எடுத்துப் பாத்திரம் விற்பவர்களிடம் போட்டுவிடும் மகளிரும் உளர். தம் திறனைச் சற்றுப் பயன்படுத்தினால், கிழிந்த துணிகளைப் பொருத்தி இன்னும் பல நாட்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கும் ஒரு தனித் திறன் வேண்டும். கிழிந்த நிலை தெரியாமல் பொருத்துவது ஒரு கலை. அதே வண்ணமான நூலைக்கொண்டு கண்ணுக்கு வேறு பாடு தெரியாமல் பொருத்துதல் வேண்டும். அழுத்தமான கம்பளி உடைகள், காலில் அணியும் பேலுறை முதலியவற்றில் ஏற்படும் கிழிவுகளைச் சரியானபடி செப்பனிட்டால் அவை பல காலம்

பயன்படும். ஆடவர் அணியும் உடைகளிலிருந்து பொத்தான்கள் மிக எளிதில் உடைந்து விடுதல் இயல்பு. இதைப் பொருத்துகின்ற அளவிற்காவது ஒவ்வொருவரும் தையல் அறிந்திருக்க வேண்டும் என்பதால், மகளிர் பள்ளிகளில் இந்தத் தையற் கலை கற்பிக்கப்படுகின்றது.

சில உடைகள் புதியனவாக இருக்கின்ற காலத்திலேயே, அணிபவர் ஒரு சுற்று பருத்துவிடுவதாலோ, ஓர் அங்குலம் வளர்ந்து விடுவதாலோ அவ்வுடை பயனற்றுப் போய்விடுகிறது. தையல் கற்றிருப்போரின் இல்லங்களில் இவ்வுடை புதியதொரு நிலை பெற்றுப் புதியதொரு சிறப்பும் அடைந்துவிடும். இவ்வுடைகளில் உள்ள தையலை ஒழுங்காகப் பிரித்து வெட்டிச் சிறுவருக்கென வேறு உடை தைத்து விடலாம்; கவர்ச்சிகரமாகவும் அமைத்துவிடலாம்.

பழைய உடைகளைப் புதியதாக்குகின்ற இந்த முறைக்குத் தற்கால நாகரிகமும் ஆதரவு தருகின்றது. இரண்டு கிழிந்துபோன புடவைகளை எடுத்துக் கிழியாத பகுதிகளைக் கொண்டு ஒரு புதிய புடவை தயாரித்துவிடலாம். இதிலே கலை உணர்ச்சி அதிக அளவிற்குத் தேவை. கண்டபடி அமைத்து விட்டால் கேலிக் கூத்தாகப் போய் விடும். கலை உணர்ச்சியுடன் அழகுணர்ச்சியும் சேர்ந்து, இந்த ஒட்டு வேலையைச் செய்தால்

இதனைக் காண்பவர் இதற்காகவே இருவேறு புதிய துணிகளை வாங்கியும் இவ்வாறு அமைக்க விழைவார்கள்.

தையல் வேலையின் இரண்டாவது பகுதி சித்திரத் தையல். இது மக்களுடைய உடையில் மட்டுமன்றி, வீட்டை அலங்கரிக்கும் பொருட்களிலும் கவர்ச்சிகரமாக விளங்கும். மேசை விரிப்புகள், நாற்காலியின் சாய்வுப் பகுதிகளை எண்ணெய்ச் சிக்கினின்று காக்க உதவும் உறைகள், வாயில்களில் தொங்கவிடப்படும் திரைகள், வானொலிப் பெட்டி உறைகள், விளக்கின் திரைகள் (Shades), படுக்கை விரிப்புக்கள், தலையணை உறைகள் இவைகளிலே சித்திரத் தையல்களைத் தைக்கலாம்.

சித்திரத் தையலுக்கு மெல்லிய ஊசியையும், பொருத்தமான பல வண்ண நூல்களையும் பயன்படுத்துதல் வேண்டும். வலது கையின் நடு விரலைக் கொண்டு ஊசியைப் பலமுறை தள்ளுதல் வேண்டும் ஆதலால், அவ்விரலின் நுனியில் ஒரு சிறு கவசம் போன்ற மூடி (Thimble) அணிதல் வேண்டும். தையல் மிக நுணுக்கமாக அமையும் பொழுது துணியில் சுருக்கம் ஏற்படுவது இயல்பு. அது நேரிடாவண்ணம் சுருக்கமின்றித் துணியைப் பிடித்துக் கொள்ளும் வட்ட வடிவமான சட்டத்தைப் (Frame) பயன்படுத்துதல் வேண்டும்.

சித்திரத் தையலுள் பல வகை உள. மிக எளிதாகவும் கவர்ச்சிகரமாகவும் தைப்பதற்குக் குறுக்குத் தையலைப் (Cross Stitch) பயன்படுத்தலாம். இதற்குத் தேவையான சித்திரத்தை ஒரு தாளில் எழுதி வைத்துக்கொண்டு மேட்டி போன்ற துணிகளில் அழகாகப் பல வண்ணங்களுடன் தைத்து விடலாம். சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முறையைக் கொண்டு கண்ணட்டையில் விதவிதமான சித்திரங்களை தைத்துக் கண்ணடிச் சட்டம் மாட்டிச் சுவர்களிலே அலங்காரமாகத் தொங்க வைத்தார்கள்.

அடுத்தது, குட்டையும் நீளமுமான நெடுந் தையல்களை (Long & Short) மாற்றி மாற்றி அமைத்து உருவங்கள் அமைப்பது. இத் தையலைக் கைவரப் பெற்றவர்கள் இயற்கைக்குப் பொருத்தமான வண்ணங்களைக் கொண்டு, நிழல் வெளிச்சம் ஆகிய முறைகளையும் செவ்வனே அறிந்து தைத்து முடிப்பாராயின், ஓவியன் ஒருவன் பல வண்ணங்களைக் குழைத்துத் திரையில் எழுதும் ஓவியங்களுடன் ஒப்பத் தோன்றும்.

எளிய முறையில் கவர்ச்சிகரமாகத் தைக்க, சங்கிலித் தையல், இறகுத் தையல், இரட்டை இறகுத் தையல், கொம்புத் தையல் ஆகிய பலவற்றையும் பயன்படுத்தலாம். இத் தையல்களெல்லாம் நல்ல பூ வேலைகள் அமைப்பதற்கும் கரை போடுவதற்கும் பயன்படும்.

நூலைப் பிரித்து எடுத்துவிட்டுத் தைத்தல் ஒரு முறை. எந்த வண்ணமான துணியில் இந்த வேலைப்பாடு செய்கின்றோமோ, அந்த வண்ணமான மெல்லிய பட்டுநூல் இதற்குத் தேவை. இம் முறையைக் கைக்குட்டைகளுக்குக் கரை அமைப்பதற்கும் அதன் ஒரு கோணத்தில் வடிவங்கள் அமைப்பதற்கும் பயன்படுத்தினால் பொருத்தமாக இருக்கும்.

பூ வேலைகளுக்குப் பயன்படும் தையல்களே அல்லாமல் சிறுவர்களின் உடையில் சுருக்கம் வைக்கிற இடங்களில் தைக்கும் தேன் கூட்டுத் தையல் (Honey-Comb stitches), கூட்டுத் தையல் (Smock Stitch) முதலிய முறைகளும் உள. சிறு பெண்கள் அணியும் சுருக்கம் மிகுந்த உடைகளில் இவை கவர்ச்சிகரமாகத் தோன்றும்.

பாசிகளையும், வெள்ளி பொன்னாலாகிய சரிகைகளையும் கொண்டு தைத்தல் ஒரு முறை. இம்முறையில் திறம்படத் தைத்துச் சிறப்புப் பெற்றிருப்பவர் நம் தேசத்து மக்கள். இந்தியாவில் இம்முறையில் அலங்கரிக்கப்படும் ஆடைகளை மக்கள் அதிகம் விரும்புகிறபடியால், பலர் இத் தொழிலில் ஈடுபடுகின்றனர். நம் நாட்டுக் குடிசைத் தொழில்களிலே இதுவும் ஒன்று. இவ்வாறு தயாரிக்கப்படும் உடைகளுக்குப் பிற நாடுகளில் மிகுந்த மதிப்பு ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு

முறையில் சித்திரத் தையலைத் தைத்து விற்பனை செய்தால் பெரிய அளவிற்கு ஊதியம் பெறலாம்.

தேவைக்குப் பயன் படுவதும், வாழ்க்கைக்குப் பொருள் தருவதும், கண்களுக்குக் காட்சியளிப் பதும், உள்ளத்திற்கு உவகை யூட்டுவதும், உடலுக்குக் கவர்ச்சி யளிப்பதுமான தையலும் சித்திரத் தையலும் ஒவ்வோர் இல்லத்திலும் போற்றப்படுதல் நலம் பயக்கும்.

## 4. வீட்டிற் கலை

கலை என்பது என்ன என்ற கேள்விக்கு எங்கும் விடை கிடைப்பது அரிதாயிருக்கிறது. கலை, காணும் இடங்களில் கருத்துக் கிசையக் காணப் படும்; பொருளைக் கொடுக்கும்; கண்டோரைக் கவரும். உள்ளத்தில் உண்டாகும் கற்பனையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்தி அவரைக் கவரச் செய்வதே கலை. அது அழகிய கதையிலே இருக்கலாம்; கவிதையிலே இருக் கலாம்; அல்லது ஓவியத்திலே, நாட்டியத்திலே, பேச்சிலே, சாதாரண வாழ்க்கையிலே பரிண மிக்கலாம்.

சாதாரண வாழ்க்கையில் அல்லது வீட்டில் இந்தக் கலையைக் காண முடியுமா? ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வீட்டில்தான் வாழ்கிறான். ஆனால், எல்லா வீட்டிலும் கலை பரிணமிப்பதில்லை.

கலை என்பது எங்கும் தோன்றுவதில்லை. இயற்கையில் கலை இருக்கிறது. ஏனென்ருல், அது இறைவன் என்னும் கலைஞனின் படைப்பு. கலைஞன் எங்கிருக்கிருனே அங்குத்தான் கலையுண்டு. ஆகவே, வீட்டிலே கலையுள்ளம் படைத்த ஒருவர் இருந்து கலையை உணர்ச்சி குன்ருமல் பிறருக்கு வெளிப்படுத்தும் நிலையில் வாழ்ந்தால்தான் கலையைக் காணலாம். மனிதன் இறைவனுகிய கலைஞனுல் படைக்கப்பட்டவன். அவன் கலையுள்ளம் படைத்தவனுகவே இருக்க வேண்டும். எல்லாருக்கும் கலையைப் பெருக்க வழியுண்டு. ஆனுல், சோம்பல், சோர்வு என்னும் கெட்ட பழக்கங்கள் மக்களின் உள்ளத்தில் இக் கலையுணர்ச்சியை அவித்துவிடுகின்றன. ஆகையால்தான் கலை சில வீடுகளில் மிளிர்கின்றது ; சில வீடுகளில் காணப்படுவது இல்லை.

வீட்டின் அமைப்பிலே கலையை எந்தெந்த நிலையில் காணலாம் என்ருல், வீட்டினுடைய உயரத்திலோ அன்றிப் பருமையிலோ அன்று. கம்பீரமான தோற்றத்திலே, கவர்ச்சிகரமான அமைப்பிலே கலையைக் காணலாம். அது பெரும்பாலும், கட்டுபவனுடைய கலை உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது.

வீட்டினுள் காணப்படும் கலைக்கு வீட்டுத் தலைவன் அல்லது தலைவி பொறுப்பாளி. சிறப்

பாகத் தலைவிதான் பொறுப்பாளி என்றுகூடச் சொல்லலாம். முதலாவதாக, வீட்டிலே அறைகளைச் சரியான முறையிலே தேர்ந்தெடுப்பதிற் கலை இருக்கிறது. சிலர் வசதியான முறையில் தேர்ந்தெடுத்திருக்கலாம். அதுவும் அவசியம். ஆனால், கலை அதில் இருக்க முடியாது. தேவையைப் பூர்த்தி செய்வதோடு எந்த அழகுணர்ச்சியுடன் தேர்ந்து கொண்டாரோ, அந்த உணர்ச்சி எதிரொலி ஆகும் முறையில் அறைகள் அமைத்தல் வேண்டும். ஒருத்தி தன் நெற்றியிலே பொட்டிட்டுக் கொள்ளுகிறாள். அதிலே எப்பொழுதும் கலை இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. மேல் நாட்டு உடை அணிந்த பெண்ணின் நெற்றியிலுள்ள திலகம் அழகை வெளிப்படுத்துவதில்லை. கரிய கூந்தல் தவழ்ந்தாடும் அழகிய நெற்றியிலே நம் நாட்டு உடைக்கு ஏற்பக் குங்குமத்தைத் தரித்துக் கொள்ளும்போது அங்கே கலையைக் காணலாம். அதுபோலத்தான் கலையழகு தோன்றும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறைகளிலே தேவையான பொருட்களை அமைத்து வைப்பது.

சில வீடுகளிலே அழகிய வர்ணம் பூசப்பட்ட சுவர், விலையுயர்ந்த கம்பளம் விரித்த தரை, அழகிய சாமான்கள், விலையுயர்ந்த பொருட்களின் குவியல்கள் இவற்றைக் காணலாம். ஆனால், அங்கு வெண்மாவு கொண்டு கோலம் இடப்பட்ட முற்றத்தில் பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்ட ஒரு

திண்ணையில் காணப்படும் கலை சில நேரம் காணப் படுவதில்லை. காரணம், அங்கேயும் பொருட்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலோ, அன்றிச் செல்வத்தின் பெருமிதத்தை வெளிக்குக் காட்ட வேண்டிய அளவிலோ சாமான்கள் நிரப்பப் பட்டிருப்பதுதான். சாமான்கள் அமைக்கப்பட் டிருக்கும் விதத்தில், எளிய முறையிலே ஆயி னும், அழகுணர்ச்சி தோன்றக்கூடிய வகையில், தேவைக்கு அவசியமான பொருட்களை இடத் திற்கு அமைந்தாற்போல வைப்பதுதான் கலை.

சாமான்களை இடத்திற் கேற்ப அமைப்பதில் கலை மிளிர்கின்றது என்றால், சாமான்களைப் பொறுக்கி எடுப்பதிலும் கலை காணப்பட வேண்டும். விலை மலிவு என்ற காரணத்தைக் கொண்டோ, பெருமைக்காகவோ பொருளை வாங்கி நிரப்பினால் கலையைக் காணமுடியாது. நம் அறையின் அமைப்பு என்ன, அந்த அமைப்பிற் கேற்ப இப்பொருள் பொருந்துமா, பொருந் துவதோடன்றி அழகு காணப்படுமா என்று உன்னிப்பார்த்துப் பயனுள்ள பொருட்களை வாங்கு வதில் கலை இருக்கிறது என்று சொல்லலாம்.

உதாரணமாக, வீடு ஒரு நடுத்தரமான வீடு, போதுமான அறைகள், வீட்டிலுள்ளோர் படித்த நாகரிக வாழ்க்கையிலுள்ளவர்களுடன் பழகு கின்றவர்கள் என வைத்துக் கொள்ளு வோம். அவர்களுக்குத் தங்கள் நண்பர்

வந்தால் அவர்களுடன் உட்கார்ந்து அளவளாவ ஒரு நல்ல அறை வேண்டும். அங்கே உட்காருவதற்கு ஒரு அழகான கட்டிலை வைத்திருந்தால் அது கலையன்று. தங்கள் தகுதிக்கு ஏற்பச் சில நாற்காலிகள், அவற்ருேடு பொருந்தும் ஒரு சிறிய வட்டமேசை, மேசையின் மீது விரிப்பு, அழகிய பூக்களைத் தாங்கி நிற்கும் ஒரு சிறிய செம்பு இவைகளை அமைக்கும் முறையில் அமைப்பதிலே கலை காணப்படுகிறது.

பல நிறப் பூக்களை எடுத்துச் செம்பிலே தண்ணீர்விட்டு வைத்துவிட்டால் கலை அங்கே காணப்படுவதில்லை. செம்பின் தோற்றம், பூக்களின் தோற்றம் இரண்டிற்கும் பொருத்தம் காணப்பட வேண்டும். ஒடுங்கி நீண்ட பூச் செம்பில் பருத்துத் திரட்சியாகக் காணப்படும் மலர்களைக் குட்டையான தண்டுகளுடன் வைத்தால் பொருந்தி நிற்க மாட்டா. அதுபோலவே, பருத்து விரிந்த செம்பில் நீண்ட தண்டுகளையுடைய மெல்லிய அல்லி போன்ற மலர்களை விட்டு வைத்தல் பொருந்தாது. நிறங்களையும் பார்த்தே அமைத்தல் வேண்டும். ஆகவே, கலை என்பது பொருட்கள் ஒன்ருேடொன்று பொருந்தும் நிலையிலேதான் காணப்படும். மாலை என்ருல், மதியமும் மலர்களும் தென்றலும் எவ்வாறு பொருந்தி வருகின்றனவோ, அமாவாசை என்ருல், நள்ளிரவு, இடியின் முழக்கம், மின்னலின் பிளவு இவை எவ்வாறு பொருந்தி

நிற்கின்றனவோ, அவ்வாறு அளவில் அறையின் தேர்வு, அமைப்பு, சாமான்கள், சாமான்களின் தேர்வு முதலியவை பொருந்தி இருக்கவேண்டும்.

நண்பர்களுடன் கூடிப் பேசும் அறையைத் தவிர வேறு பல அறைகள் தனித் தனி உபயோகத் திற்காக விட்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தந்த அறையில் கலை எவ்வாறு பொலிவுறும் என்று பார்க்கலாம். வீட்டிலே வாசிப்பு அறை ஒன்று இருக்கிறது. அதிலே கண்ணைக் கவரும் நூல்கள் நிரம்ப உள. அழகிய விளக்கும் உண்டு. மேலே மின்சாரக் காற்றாடியும் உண்டு. இவ்வளவு பொருட்கள் இருந்துவிட்டால் கலை உண்டு என்று சொல்ல முடியுமா? அதுதான் இல்லை.

அந்த அறையினுட் செல்லும் ஒருவருக்கு உட்கார்ந்து புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்னும் உணர்ச்சி உண்டாகும் நிலையில் அந்த அறையில் பொருட்களை அமைத்து இருக்க வேண்டும்.

விளக்கு வாசிப்பதற்குப் போதுமான ஒளியை உடையதாக இருக்க வேண்டும். நடுவிலே அழகிய மேசை, சுற்றிலும் நாற்காலிகள் வேண்டும். விரிப்பு களோ பூச்செம்புகளோ அத்தனை அவசியமில்லை. இங்கேயும் கலையைக் காண வேண்டும். எங்கே என்றால், அலமாரியிலே, அலமாரிகளை அமைத்

திருக்கும் நிலையிலே, அதில் நூல்களை ஒழுங்காக அழகாக முறை தவருமல் அடுக்கியிருக்கும் அந்தத் தகுதியிலே கலையைக் காணலாம். வீடு சிறிதாக இருக்குமேயானுல், கலையழகு குன்ருத வண்ணம் அதையே ஆபீஸ் வேலைகளைச் செய்யும் ஓர் இடமாகவும் கொள்ளலாம். கலையழகு அதனுல் குன்றிவிடுவதில்லை. வைத்திருக்கும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.

படுக்கையறை ஒவ்வொரு வீட்டிற்கும் இன்றியமையாதது. நல்ல காற்ருேட்டமுள்ள அறைகளை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இங்கே கட்டில் உபயோகிக்கப்படுமானுல் அதனடியில் பெட்டியோ மற்ற சாமான்களோ வைக்கப்படக் கூடாது. ஒரு சிறிய டிரெஸ்ஸிங் டேபிள், வார்டு ரோப், அவசியமானுல் உட்கார்ந்து வாசிக்க ஒரு சாய்வு நாற்காலி, அதற்கென ஒரு மேசை விளக்கு- இவ்வளவு பொருட்கள் இருந்தால் சௌகரியம். ஆனுல் அங்கேயும் அவைகளை உபயோகிக்கும் முறையில் கலையைக் காணலாம். படுக்கை விரிப்பிலே, தலையணை உறையிலே, கொசு வலையிலே கலையுள்ளம் தையலில் பரிணமிப்பதைக் காணலாம்.

பின்னர், சாப்பாட்டு அறைக்குச் செல்லுவோம். அங்கே அவசியமான பொருள்கள் அவரவர் வழக்கத்திற்கேற்ப மாறுபடலாம். கலை

வேண்டுமானால் ஒரு முறையை அனுசரிக்க வேண்டும். ஒன்று மேனாட்டு முறை; அல்லா விட்டால் தமிழ்நாட்டு முறை.

உண்கலங்கள் அநேகமாக உபயோகத்திற் கேற்றாற் போல ஒரே விதமான வேலைப்பாடுள்ள தாக இருக்கவேண்டும். அவைகளைச் சுத்தம் செய்து அடுக்கி வைத்திருக்கிற முறையில் கலை கமழ வேண்டும். பால், மோர், தயிர், பழம், சர்க் கரை, வெண்ணெய் ஏனைய பொருட்களை ஒரு அலமாரியிலே, உள்ளே எறும்பு செல்லாதபடி கால்களிலே தண்ணீர் ஊற்ற வசதியுடைய நிலை யிலே, அமைத்து வைப்பது வெறும் பயன் மட்டு மன்று; கலையுமேதான். செல்வர்கள் ரெபரிஜரேட் டரை (Refrigerator) அதற்குப் பதில் வைத்துக் கொள்ளலாம்.

சமையல் அறைக்குச் சென்றால் அங்கேதான் கலை முழுவதுமாகப் பிரதிபலிக்க வேண்டும். ஏழையின் குடிசையானாலும் சரி, அல்லது செல் வந்தரின் சமையலறை யென்றாலும் சரி, அங்கே பொருட்களை வைக்கும் முறையில் கலையைக் காண வேண்டும். நடுத்தரமான வீட்டிலே சமைய லறையில் கலையைக் காண முடியும் என்றால் எப்படி இருக்க வேண்டும்? ஏனைய அறைகளை விடச் சமையலறை சற்றுப் பெரிதாக இருந்தால் நல்லது. அடுப்பு, அதற்கு மேலே புகைப்

போக்கி, அடிப் பகுதியிலே மழைக் காலத்தில் மட்டும் விறகுகளைக் காயவைத்துக் கொள்ளப் போதுமான இடம், இவை வேண்டும். ஆனால், தரையிலே அடுப்புகளை அமைத்து விட்டால் இந்த வசதி ஏற்படாது.

அவ்வறையிலே பொருட்களை அமைத்திருக்கும் முறை உட்சென்றவுடன் அறை விசாலமானது என்று காட்ட வேண்டும். ஆனால் வேலை செய்பவர்களுக்கு அலைச்சல் அதிகம் இருக்கக் கூடாது.

அடுப்பின் பக்கத்திலே சிமெட்டியாலான ஒரு மேசை போன்ற உயரமான திண்ணை தினமும் கழுவிவிடக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். சமையலறையின் ஒரு மூலையிலேயே ஒரு சிறிய தண்ணீர்க் குழாய், அதன் நீர் உள்ளே தெறித்து விழாத நிலையில் ஒரு சிறிய தொட்டி, இவைகளை வைத்திருப்பது மிகவும் நல்லது. அம்மி, மாவாட்டும் உரல் இவ்வளவையும் சமையலறையிலேயே வைத்துக்கொள்ளக் கூடிய அளவில் அறை பெரிதாக இருப்பது நல்லது. ஒரு பெண்ணின் கலைத்திறன், கலையுணர்ச்சி முழுவதும் அவள் சமையலறையில்தான் விளங்க வேண்டும்.

சமையலறையில் மட்டுமன்று ; அதனை அடுத்துள்ள பொருள்களைச் சேகரித்து வைக்கும் அறையை மிகவும் சுத்தமாக வைத்திருப்பதிலும்,

பொருட்களை வைத்திருப்பதிலும் பொருட்களை வைத்திருக்கும் பாண்டங்களை அடுக்கி வைத்திருக்கும் எளிய முறையிலும் கலை இருக்கத்தான் செய்கிறது. பொருட்களை வைக்கும் பாண்டங்கள் கூடிய மட்டும் ஒரே வகை சாமான்களாயும் ஒரே விதமான வேலைப்பாடுள்ளவைகளாகவும் அமைந்திருந்தால், அதில் ஒரு தனிக் கலை காணப்படும்.

வீட்டைச் சுற்றியுள்ள பாகங்களுக்குச் சென்றால், அங்கே தான் கலை தன் உன்னத நிலையில் விளங்க வேண்டும். சுற்றுப்புற அமைப்பு பிறரைக் கவரக் கூடிய நிலையில் இருக்கும்பொழுது கலை அங்கே காணப்படுகிறது.

தோட்டத்தை எடுத்துக் கொள்ளுவோம். பூந்தோட்டம் அமைப்பதிலும் கலையைக் காணலாம். வீட்டின் முன்பக்கம் பூந்தோட்டம்; பின் பக்கம் காய்கறித் தோட்டம் என அமைக்க வேண்டும். தோட்டம் என்றால் செடிகளை நட்டுப் பயிராக்குதல் என்று கொள்ளமுடியாது. அவைகளை வரிசைப் படுத்தி முறைப்படுத்தி அமைப்பதில் தான் கலை இருக்கிறது. தரையில் வைக்க வேண்டிய செடிகளைத் தோற்றம் நிறம் முதலியவைகளுக் கேற்ப ஒழுங்கு படுத்தி நட்டுவிட்டு, தொட்டிகளில் வைக்க வேண்டிய செடிகளைத் தொட்டிகளில் நட்டு வைத்தலில் தனிக் கலை காணப்படுகிறது. மேலும் பாத்திகளின் இரு கரைகளிலும் குட்டை

யான வெட்டி விடக் கூடிய செடிகளை வைத்து அவைகளை அழகாக வெட்டிவிடுவதில் கலை காணப் படுகிறது. பின்னிப் பின்னி அடர்ந்து வளர்ந்து ஒழுங்கற்று நிற்கும் செடிகளை எவ்வளவு அழகான முறையில் வெட்டி வளர்க்கிறார்கள் என்பதை, திருவனந்தபுரம், பங்களூர். நீலகிரி, கொடைக் கானல், கொழும்பு, டெல்லிபோன்ற இடங்களில் சென்று பார்த்தால் நன்கு தெரியும்.

இவ்வாறு வீட்டின் பல பகுதிகளையும் பலவித மாக வைத்திருப்பதால் என்ன விதமான கலை யைக் காண்கிறோம் ? அங்கே கவிதையிலே காணும் கலை, சிற்பத்திலே காணும் கலை, சித்தி ரத்திலே காணும் கலை ஆகிய பல கலைகளைக் காண் கிறோம். வீட்டை அமைக்கும் முறையில், வீட்டிலே பொருட்களை அமைக்கும் முறையில் கலையுள்ளத் தின் கற்பனைத்திறன் காணப்படுகிறது. இலக்கி யத்திலே அல்லது கவிதையிலே காணப்படும் கலையின் தோற்றமும், வீட்டின் பொருட்களை அமைக்கும் முறையிலே காணப்படும் கலையின் தோற்றமும் ஒன்றே.

சித்திரக்கலையை நம் வீட்டிலே அழகு படுத்து வதற்காக உபயோகிக்கும் படங்கள், விரிப்புகள், தொங்கல்கள் முதலியவைகளில் காண்கிறோம். சித்திரத்தையல்கள் வீட்டின் அழகை மேம்படுத்து கின்றன. ஆனால், அவைகளை உருவாக்கும் நிலையில் முழுச் சித்திரக் கலை காணப்படுகிறது.

இயற்கையின் அழகைச் செயற்கை வாயிலாகக் காட்டுவதே ஒரு கலையன்றோ ?

அடுத்தாற்போல, சிற்பக்கலையை எங்குக் காண்கிறோம் என்றால், அது வீட்டைச் சுற்றியுள்ள தோட்டங்களிலே செடிகளை நாம் வெட்டி விடுகின்ற நிலையிலே காண்கிறோம். தோட்டத்திலே சிற்பக் கலையை மட்டும் காண்கின்றோம் என்று சொல்லுதல் சரியன்று. அங்கே கற்பனைக்கு இடமுண்டு; ஓவியக் கலைக்கு இடமுண்டு; சிற்பத்திற்கு இடமுண்டு. ஆகவேதான் வீட்டிலே கலை, வீட்டின் அமைப்பிலே கலை, பொருட்களிலே கலை, பொருட்களை அமைக்கின்ற முறையிலே கலை, அகத்திலே கலை, புறத்திலே கலை, எங்கும் கலை என்று கூறுகிறோம்.

கலை உணர்ச்சியை எவ்வாறு தோற்றுவிக்க வேண்டுமென்றால், புதிதாக உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. இறைவன் படைத்த எல்லாப் பொருட்களிலும் கலை உண்டு. அறிவுள்ள பொருட்களிலே கலையுடனே கலையுணர்ச்சியும் உண்டு. ஆகவே, அக்கலையுணர்ச்சியை எழுப்பி விடுவதின் மூலம் கலையைப் பெருக்க வேண்டும். எவ்வாறு எனில், கலையின் பொலிவு நிறைந்த இடங்களைப் பார்க்க நேரிடுவதால் கலையுணர்ச்சி தூண்டப்படுகிறது ; பலரோடு பழகுவதால் ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, சோம்பல் சோர்வு நீங்கி, உழைப்பு ஊக்கம் ஏற்படும்போது

தொழிலிலே உள்ளம் ஈடுபடுகிறது. தொழில் சிறக்கும் நிலையில் கலை ஏற்படுகிறது.

வீட்டிலே மகளிர், வேலைக்காரர்கள் -கையில் எல்லாப் பொறுப்பையும் ஒப்புவித்து விட்டு நிம் மதியாக இருக்கலாம் என்று நினைக்கும் தவறான எண்ணம் நீங்கினால்மட்டும் எல்லாருடைய வீட்டிலும் கலை கமழும். வேலைக்காரர்களைக் கொண்டு வேலைகளைச் செய்யச் செய்து பொறுப்பை மட்டும் தாங்களே ஏற்று நடத்த வேண்டும். அப் பொழுதுதான் வீட்டிலே கலை நிறைந்திருக்கும். கலை நிறைந்த வீட்டிலே வாழ்வு மகிழ்ச்சியாய் இருக்கும். மகிழ்ச்சி நோயைப் போக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். ஆகவே, அத்தனைக்கும், வாழ்விற்குக்கூடக் கலை அவசியம்; அதுவே அடிபடையென்றே கூறலாம். எனவே, கலை நிறைந்திருந்தால், வீடு வீடாகும் அன்றோ!

# 5. பொழுது போக்கு

பெண்களுக்குள் வீட்டு வேலை நிரம்ப இருக்கிற பெண்களும், வேலையில்லாமல் பொழுது போக்காக என்ன செய்வது என்று நினைக்கிற பெண்களும் என இருதிறத்தார் இருக்கிறார்கள். ஏழெட்டுக் குழந்தை குட்டிகளைப் பெற்று விட்டு, அவர்களை வளர்ப்பதிலும் அடுப்பூதுவதிலும் தங்கள் நேரம் முழுவதையும் செலுத்தி விடுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். வீட்டு வேலைகளைச் செய்வதற்கு வேலைக்காரர்களைப் பெற்றிருக்கும் பாக்கியம் உடையவர் சிலர் உண்டு. அவர்கள் பொறுப்பை எல்லாம் வேலைக்காரரிடத்தும் சமையற்காரரிடத்தும் கட்டிவிட்டு, தம் நேரம் பாரமாய் இருப்பதாகப் பல வேளைகளிற் கருதுவது உண்டு.

அவ்வாறு ஓய்வு நேரம் நிரம்ப உடையவர்கள் பொழுது போக்காக எவ்வளவோ பணி



4

களில் ஈடுபடலாம். சித்திரம் எழுதுதல், சங்கீதம் பயிலுதல், கோலம் போடுதல், பாய் பின்னுதல், துணி தைத்தல், பூவேலை செய்தல், மணி தெற்றுதல் முதலிய கலைகளில் அவர்கள் ஈடுபடல் பொழுது போக்காகவும் பயனுடைத்தாகவும் இருக்கும்.

ஏதாவது ஒரு கலையைக் கற்று, அதில் ஈடுபட்டால் நம்முடைய முழுத்திறமையையும் ஆற்றலையும் காட்ட முடியும். நாம் ஒன்று செய்து முடித்து விட்டோம் என்ற மனமகிழ்ச்சி ஒரு பக்கம் உண்டாகும். மற்றொரு பக்கத்தில், நம்முடைய நண்பர்க்கும் உறவினர்க்கும் மகிழ்ச்சி ஊட்டுகிறோம் என்பதால் உண்டாகக் கூடிய இன்பம் தோன்றும். ஏதாவது ஒன்றைச் செய்து முடித்தோம் ஆனால், இதைப்போல இன்னும் பலவற்றைச் செய்யலாம் என்ற உணர்ச்சியும், செய்ய வேண்டியவை உயர்ந்தனவாகவும் பெரியன வாகவும் பற்பல இருக்கின்றன என்ற உணர்ச்சியும் நம் உள்ளக் கிளர்ச்சியை எழுப்பி விட்டு, நம்மை உற்சாகத்தோடு இருக்கும்படி செய்யும்.

சித்திரக் கலையிற் பழகியவர்கள் அஜந்தா ஓவியங்களை அறியாமல் இரார். கி. பி. முதல் நூற்றாண்டு முதல் ஏழாவது நூற்றாண்டு வரை இயற்றப்பட்ட புத்த சித்திர வகைகள் நம் மனத்திற்கு இன்றும் எத்துணை இன்பம் கொடுக் கின்றன! சிவன் மடியில் பார்வதி உட்கார்ந்து

இருப்பது போலவும், அவரிடமிருந்து உபதேசம் பெறுவது போலவும் உள்ள சித்திரத்தின் அழகை என்ன என்று சொல்வது ! பார்வதி தூரிகையின் சில கோடுகளால் அருமையாக அமைக்கப்பட்டு இருக்கிருள். சித்திரக்காரர் தலையின் அமைப்பிலும், நிலையிலும் தோற்றத்திலும் மிக்க கவனத்தைச் செலுத்தியிருக்கிருர். ஏதோ இரண்டு பறவைகள் தமது இறக்கைகள்மீது ஓய்வெடுத்துக்கொள்வது போன்று அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஓவியத்தின் எழில் தலைமுறை தலைமுறையாக நமக்கு இன்பம் கொடுத்து வருகிறது.

மானைக்கொண்டு மானைப் பிடிப்பது என்று கேள்விப்பட்டிருக்கிருேம். பழகிய மானை வளர்த்து வந்தவர் ஒருவர், அந்த மானைக்கொண்டு மான் கூட்டத்தைப் பிடிப்பதற்காக அதனை அழைத்துக்கொண்டு முன் பக்கம் போகிருர். மான் கூட்டம் எதிரே வருகிற நேரத்தில், "ஐயோ என் இனத்தைக் காட்டிக் கொடுக்கிறேனே" என்ற உணர்ச்சியால் நாணிக் கோணுவது போல ஒரு பாவம் தோன்றும்படி அமைக்கப்பட்ட ஓவியம் ஒன்றைக கண்டு உவகைக் கடலில் ஆழ்ந்திருக்கிறேன். அந்த ஓவியம் ஜிஹாங்கீர் காலத்தில், பலனேழாம் நூற்ருண்டில் மனேஹர்தாஸ் என்பவரால் தீட்டப்பட்டது என நினைக்கிறேன். அதைப் பார்த்துப் பார்த்து இன்றும் எத்தனை பேர் பசி தீர்கிருர்கள் !

இன்னொரு அழகான சித்திரம் நம் உள்ளத்தை இன்னும் கொள்ளை கொள்கிறது. மலர் நிரம்பிய மரக்கிளை ஒன்றிலே ஒரு பெண் உல்லாசமாக உட்கார்ந்து கொண்டு, இதயபூர்வமாக வீணையோடு கலந்து இன்னிசை எழுப்புகிறது போல அச் சித்திரம் இருக்கிறது. சுற்றிலும் இருக்கும் பறவை களும் மரமுங்கூட கவனமாகக் கேட்பது போலத் தோற்றுகிறது. இவ்வளவு நயத்தோடு உயிர் பெற்று விளங்கும் "நாக மாலா" சித்திரம், ஏதோ ஒரு நாகத்தின் முக்கிய அம்சங்களோடு ஐக்கியப் பட்ட ஓர் ஓவியனால் தீட்டப்பட்டிருக்க வேண்டும். இதனைக் கண்டு மகிழாதார் இல்லை.

புதுக்கோட்டைக்கு அடுத்த சித்தன்னவாசலில் உள்ள பலவர்ணச் சித்திரங்களைப் பாராட்டாதார் இல்லை. அவை ஏழாம் நூற்றூண்டில் வரையப் பட்டவை. இரண்டு மகரங்களின் வாயிலிருந்து கிளம்பும் தாமரை மலர்கள், அல்லிப்பூக்கள், வளைவான தாமரைக் கொடிகள், இலைகள் எத்துணை அழகாக இயற்றப்பட்டுள !

தஞ்சைப் பெரிய கோயிலில், கர்ப்பக் கிரஹத்தின் உள்ளே அமைந்துள்ள சித்திரங்கள் ராஜராஜ சோழன் வாழ்ந்த பதினோராம் நூற்றூண்டில் இயற்றப்பட்டவை. அங்கே ஓர் ஓவியத்தில், சுந்தரமூர்த்தி நாயனூர் வெள்ளை யானை மீது கயிலாயம் செல்லும் காட்சி தீட்டப்பட்டிருக் கிறது. கந்தர்வர்கள் புடை சூழ்கிறூர்கள்.

தேவகானம் முழங்குவது போலத் தோற்றுகிறது. யானையின் வேகத்தையும், சேரமான் ஏறிய குதிரை பாய்ந்து போகும் திறத்தையும் உயிர்க் களையொடு தீட்டியிருக்கும் நயம் வியக்கத்தக்கது.

இதைப் போன்ற கலைச் செல்வங்கள் அழியாப் புகழ் விளைக்கின்றன. நாம் விரும்பினால், முயன்றால், அவ்வழியில் பழகினால், இத்தகைய புகழ் ஈட்டக் கூடும். பெரிய புகழ் ஈட்டா விட்டாலும், நம் அளவில் பொழுது போக்காகவும், நமக்கும் பிறர்க்கும் மகிழ்ச்சியூட்டுவதாகவும் இருக்கும்.

நாம் வடிவுகட்கும் தோற்றங்கட்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் அறிய வேண்டும். இதனைத்தான் "ரூப பேதம்" என்பார்கள். இரண்டாவதாக, "பிரமாணம்" என்பதை அறிய வேண்டும். இன்னதற்கு இன்ன அளவு பொருத்தமானது என்று அறிவதுதான் "பிரமாணம்" எனப்படும். அச்சம், வீரம், மகிழ்ச்சி, துக்கம், கோபம், சாந்தம் முதலிய பாவங்கள் தோன்றும்படி தீட்டுதற்கு அடுத்தபடியாகக் கற்றுக்கொள்ள வேண்டும். மேல், எழில் உணர்ச்சியை எழுப்பும் வகையில் தீட்டுதற்கு முற்பட வேண்டும். இதனையே "லாவண்ய யோஜனம்" என்பர். இன்னதற்கு இன்னது 'ஒப்பு' என்று அறிவது அடுத்தபடி. இனி, ஓவியத்திற்கு உரிய சாதனங்கள்,

கருவிகள் இவற்றின் உபயோகத்தையும் நன்றாய் அறிதல் வேண்டும். இவற்றில், முதலாவது சொல்லப்பட்ட ரூப பேதத்தை ஸ்ருதி என்னலாம். பிறகு சொல்லப்பட்ட ஐந்தையுஞ் சேர்த்து ஸ்மிருதி என்னலாம். ஸ்ருதி என்பது இயல்பாய் எழுவது அல்லது கடவுள் அருளால் வருவது. ஸ்மிருதி என்பது பரம்பரையாய் நமக்குப் போதிக்கப்பட்டு வருவது. இவற்றின் அம்சங்களை நன்றாகக் கற்றுச் சித்திரக் கலையில் ஈடுபடுவோமானால், நம் பொழுது போவதே தெரியாது.

எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு நாள் துரோணர் பஞ்சபாண்டவரைப் பார்த்து ஒன்று கேட்டாராம். எதிரே ஒரு மரமும் அதன் கிளையில் ஒரு பறவையும் இருந்தனவாம். தரும புத்திரர் முதலிய ஐவர் கையிலும் வில்லையும் அம்பையும் கொடுத்துத் துரோணர் “என்ன காண்கிறாய் ?” எனக் கேட்டாராம். தருமர், தமது ஆசாரியர், மரம், கிளை, பறவை, அம்பு, தம்பிமார் எல்லாம் காண்பதாகக் கூறினாராம். மற்றவரும் ஏறத்தாழ அது போலவே சொன்னாராம். அருச்சுனனைப் பார்த்து அதே கேள்வியைப் பின்னர் துரோணர் கேட்க, அவன் கூறியது என்ன ? பறவையின் தலையைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை என்பதே. உடனே “எய்” என்றார் துரோணர். இந்தக் கதை எதைக் காட்டுகிறது என்றால், மனத்தை ஒருமைப்படுத்த வேண்டும்

என்பதையே காட்டுகிறது. இந்த ஒருமைப்பாடு ஓவியக் கலைக்கு அவசியம் தேவை.

இனி, சங்கீதம் என்னும் கலையினால் நமக்கும் பிறக்கும் எத்துணை மகிழ்ச்சி உண்டாகிறது என்பது உங்களுக்குத் தெரியும். மக்களுடைய வாழ்க்கையொடு மிகவும் தொடர்புடையதாக இசை இருந்து வருகிறது. சமய சம்பந்தமான வற்றிலும், சமூக சம்பந்தமானவற்றிலும், செல்வருக்கும் ஏழைக்கும் இசை இன்றியமையாததே. சங்கீதம் என்பது கீதம், வாத்யம், நாட்டியம் இந்த மூன்றின் சேர்க்கையே ஆகும். ஆனால் இப்பொழுது முதல் இரண்டிற்கும் சிறப்புக் கொடுத்து வருகிறோம் ஆதலால், மூன்றாவதாய் உள்ள நாட்டியம் கடைநிலையிலேயே இருக்கிறது.

சங்கீதம் கற்பதால் பல நன்மைகள் உண்டு நமது மார்பில் உள்ள தசைகளும், மூச்சு ஈரலில் உள்ள தசைகளும் அசைந்து அசைந்து வலிமை பெறுவதால் காசம் இருமல் கணை முதலிய நோய் நம் உடலில் இடம்பெற மாட்டா. நீண்ட மூச்சு விடுதல் முதலிய பயிற்சிகளுக்கு வாய்ப்பாட்டில் சந்தர்ப்பம் இருப்பதால், நல்ல உடற்பயிற்சி ஆகிறது. நம் கவலைகளையும், துன்பங்களையும் ஒருவாறு தீர்க்க இசை உதவுகிறது. சங்கீதத்தினால் நம் கவலையினின்று விடுதலை பெறலாம்; நம் துயரங்களுக்கு ஆறுதல் உண்டாகும். இசை

நம்மை எல்லா நாட்டாரோடும் எல்லா மதத்தாரோடும் இசைவிக்கிறது. இசைக் கலை நமக்கு ஆனந்தத்தை விளைவிப்பதோடு அல்லாமல், நம் நெஞ்சத்தைத் தூய்மைப் படுத்திப் பிறரிடத்து இரக்கத்தை எழுப்புகிறது. சங்கீதத்தால் நமக்கு இதய சுத்தி உண்டாகும். மனத்தில் உள்ள மாற்சரியம், பொறாமை, அவா, கோபம் இவற்றை நீக்குவதற்கு இசை நல்ல சாதனம். கீர்த்தனம், வர்ணம், ராக ஆலாபனம், பல்லவி, தேவாரம், திருப்புகழ், ஜாவளி, சிந்து, தில்லானா ஆகியவற்றைப் பாடக் கற்றுக்கொண்டு கச்சேரிகள் செய்ய முற்பட்டால், பொழுது போக்குக்காகக் கற்றுக் கொண்டது பொருள் பயப்பது ஆகிவிடும்.

பாடும்போது அந்தந்தச் சுவைக்கு ஏற்ற ராகத்திற் பாடவேண்டும். உதாரணமாக, உவகைக்குக் கல்யாணி, பிலஹரி, ஹிந்தோளம் பொருத்தம். துக்கத்திற்குத் தோடி, ஸ்ரீராகம் சாவேரி முதலியன; சாந்தத்திற்குச் சங்கராபரணம், பைரவி முதலியன; வியப்பிற்கு ஆரபி, சுரடி முதலியன; மேலும், இன்ன இன்ன ராகத்தை இன்ன இன்ன காலத்திற் பாடவேண்டும் என்னும் சம்பிரதாயம் உண்டு. குறிஞ்சி, பிலஹரி, பைரவி ஆகியவற்றைக் காலை ஆறு முதல் ஒன்பது மணி வரை பாடலாம். சாரங்கா, மத்தியமாவதி ஆகியவற்றை ஒன்பதிலிருந்து பன்னிரண்டு மணி வரை பாடலாம். தோடி, சௌராட்டிரம், பந்துவராளி,

சாயங்காலம் ஆறு மணிக்குள் பாடத்தக்கன. காம்போதி, சாவேரி, பேகடை மாலை ஆறு முதல் ஒன்பது மணிவரை பாடத் தக்கன.

இந்த வரையறைகளையும் உணர்ந்து இசைக் கலையில் நாம் ஈடுபட்டால், நம் வீடுகளில் கலக மின்றிக் கவலையின்றி மகிழ்ச்சியோடு வாழ்தல் முடியும்.

எவ்வாருயினும், பொழுது போக வழியில் லாமல் தவிக்கும் பெண்கள் ஏதாவது ஒரு கலையில் நோக்கங் கொண்டு முயற்சி செய்ய முற்படுவாரே யானுல், அது அவருக்கும் நல்லது மற்றவர் களுக்கும் நல்லது என்று துணிவாகக் கூறலாம்.

## 6. குழந்தை உள்ளம்

குழந்தையின் உலகமே தனி. அவனுடைய விந்தையான உலகில் நட்சத்திரங்கள் அவனுடன் பேசும். வானம் அவன் முகத்தோடு நெருங்கி, தன் வானவில்லைச் சேர்த்துப் பிடித்துள்ள மேகங்களைக் காட்டி, அவனை மகிழ்விக்கும்.

குழந்தைகள் தங்கள் வீடுகளை மணலினால் கட்டுகிறார்கள். வெற்றுச் சிப்பிகளை வைத்துக் கொண்டு விளையாடுகிறார்கள். உலர்ந்த சருகுகளைக் கொண்டு கப்பல் விடுகிறார்கள். கூழாங் கற்களைச் சேகரித்துப் பின் சிதறடிக்கிறார்கள்.

குழந்தைகளின் மழலையில் ஒரு தனி இன்பம் உண்டு; அவர்கள் சிரிப்பில் ஒரு களிப்பு. ஆனால் அவர்கள் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டாலோ, விடை சொல்லுவதற்குத் தெளி

வான அறிவு, பெற்ருேர்க்குத் தேவையாகின்றது. குழந்தைகள் அளவில் சிறியவர்கள்தாம். ஆனுல், அறிவில் பெரியவர்கள்கூட அவர்களைச் சமாதானம் செய்யத் திண்டாடுவார்கள்.

அரசியல் உலகில், கல்லூரி மேடையில் பொதுவாழ்வில் எவ்வளவோ எளிதில் சமாதானம் சொல்லிவிடலாம். உணவு பற்றவில்லை என்ருல் கப்பல்களில் வருகின்றது என்ருே, அணைகள் கட்டத் திட்டமிட்டுள்ளனர் என்ருே சமாதானம் சொல்லி விடலாம். மாணவர் குறிப்பிட்ட புத்தகம் கிடைக்கவில்லையே என்ருல் அச்சிலிருக்கிறது என்று சொல்லி விடலாம். உண்மையில் அச்சில் இருப்பதும் வெளி வருவதும் நம் கற்பனையாக இருந்தாலும் இருக்கலாம். என் பிள்ளைக்குக் காலேஜில் ஒரு இடம் பார்த்துத் தரவேண்டும் என்று கெஞ்சி நிற்கும் தந்தையை நோக்கிப் பார்க்கலாம் என்று விடை யிறுத்து விடலாம். அவர் எப்பொழுது ? எப்படி ? என்று கேட்கமாட்டார் ; கிடைக்கா விட்டாலும் தலை விதியை நொந்துகொண்டு போய்விடுவார்.

ஆனுல், இந்தக் குழந்தை மகாராஜா அன்னையின் மடியாகிய அரியணையிலிருந்து கொண்டு ஒன்றைக் கேட்டு விட்டாலோ பெற்ருேர் நிலை கலங்கிவிடுவார்கள். காண்பவர் கிடைத்தற்கு அரிய கேட்கின்ருன், தண்டிக்க வேண்டும் என்பர்.

ஆனால், தாய் அவனைத் தண்டிக்க விரும்பும் பொழுது, அவள் அவனுடைய உயிருடன் கலந்து, அவனை அழைத்து வாரி அணைத்துக் கொள்ளு கிறாள். குழந்தை நல்லவன் கெட்டிக்காரன் என் பதற்காக அவனை நேசிப்பதில்லை. அவளுடைய குழந்தை என்பதற்காக அவன்மீது அன்பைச் சொரிகின்றாள். அவன் கண்ணில் நீர் வடிந்தால், பாரதியார் கூறுவதுபோல அவள் உள்ளத்தில் உதிரம் கொட்டிவிடும். ஆகையால், அவள் பல முறைகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்படு கின்றது.

குழந்தை விரும்பும் பொருள் பலவிதமாக இருக்கலாம். சில சமயங்களில், அவனுடைய விருப்பம் எளிதாக நிறைவேறக் கூடிய நிலையிலும் இருக்கலாம்; அரிதாகவும் இருக்கலாம். பெறு தற்கு இயலாத ஒரு பொருளை அவன் கேட்க லாம்: எட்டாக் கனியைப் பெற்று, பெற்ற மகவை இன்புறுத்த இயலாத நிலையில் பெற்றோர் இருக்கலாம்.

“அப்பா பேனாவை வைத்துக் கொண்டு நாள் முழுவதும் கிறுக்கிக் கிறுக்கிப் புத்தகங்களை யெல்லாட் வீணாக்குகிறார். நான் மட்டும் அப்பா பேனாவை வைத்துக்கொண்டு அழகாக எழுதினால் என்ன” என்று சிறுவர் கேட்பது இயல்பு. இத்தகைய சிறு ஆசைகளைப் பூர்த்தி செய்வது எளிது. தந்தையின் பேனாவைக் கொடுத்தால்

உடைத்துவிடுவாய் என்று கூறுதல் ஆகாது. ஏனெனில், அப்பொழுதுதான் உடைத்துப் பார்க்க வேண்டும் என்னும் ஒரு செயல் அவனுடைய உள்ளத்தில் உருவெடுக்கிறது. கொடுத்தாலோ, கிறுக்கிப் பேனாவைக் கெடுத்துவிடுவான். ஆகவே, வேறு பேனாவைக் கொடுத்துச் சமாதானம் செய்ய வேண்டியதுதான். அதற்கு ஒரு பழைய பேனா போதும்.

சில சமயங்களில், இதனினும் சற்று அதிக அளவான ஆசை உண்டாகிறது. “அண்ணன் பள்ளிக்கூடம் போகிறான். நான் ஏன் போகக் கூடாது. அண்ணனுடன் போய் ஆக வேண்டும்” என்பான் அந்த இளவரசன். ஒரு சிலேட், புத்தகம், பை இவற்றை வாங்கிக் கொடுத்துவிடலாம். ஆனால், ஐந்து வயதிற்குக் கீழ் உள்ள சிறுவர்களை அந்தப் பள்ளிக்கு அனுப்ப முடியாது. அனுப்பினால், எவ்வளவு நேரம் அங்கேயிருப்பான்? ஆசிரியர் என்ன சொல்லுவார்? எனவே, தாய் ஆசிரியையாக மாறுதல் வேண்டும். வீடு பள்ளியின் உருவெடுக்க வேண்டும்.

பள்ளிக்கூடத்திற்குப் போகும் வழியில் பூச்சாண்டி இருப்பான் என்று கூறிக் குழந்தையின் ஆவலை அடக்கப் பார்ப்பதற்கு முயற்சி செய்வது தவறு. அவ்வாறு செய்தால், அவன் கோழையாகி விடுவான். ஆயிரம் வீரர்களை ஒரே நாளில் கொன்று வீரச்செயல் புரிந்து அம்மாவை ஆச்சரி

டத்தில் ஆழ்த்திவிட வேண்டும் என்று எண்ணி யிருக்கும் உள்ளத்தில், வீரர்களின் கதைகளைக் கேட்டு அவர்களைப் பற்றிக் கனவு காணும் உள்ளத்தில் பூச்சாண்டி நினைவை நிலைநிறுத்துதல் பெரும் தவறு. சிலர் உபாத்தியாயர் அடிப்பார் என்று எளிதாகச் சொல்லிவிடுவார்கள். உடனே அக் குழந்தை உள்ளத்தில் பயங்கரமான ஓர் உருவம் கையில் பிரம்புடன் உபாத்தியாயராக உரு வாகிவிடும். படிப்பின்மீது ஒரு வெறுப்பு ஏற்பட்டு, வாழ்க்கையே சிறு பிள்ளைகளுக்குப் பயனற்ற தாகிவிடும். பள்ளிக்கு அனுப்ப வேண்டிய வயது வந்தவுடன் "உபாத்தியாயர் அடிப்பார் நான் போகமாட்டேன்" என்று மறுப்பதற்கு சிறு வயதில் அவன் உள்ளத்தில் உண்டான உருவம் காரணமாகி விடும். இளம் வயதில் குழந்தைகள், ஆசிரியர் தாயின் வடிவில், அருள் சுரக்கும் கண்களுடன் அமுதப் பார்வையுடன் இருப்பதைக் காண வேண்டும். ஆரம்பத்தில், தாயே ஆசிரியையாக அமைதல் வேண்டும், சந்தர்ப்பம் அவ்வாறு ஏற்பட்டால்.

குழந்தைகள் அரிய பொருட்களைக் கேட் கின்ற சில சந்தர்ப்பங்களும் வந்துவிடும். இராமன் கவியரசர்களின் கற்பனையில் புகுந்து வளர்ந்த காலத்தில், பிள்ளைப் பிராயத்தில் அம்புலியைப் பிடித்துத் தருமாறு கேட்கவில்லையா? அக்குழந்தை யைச் சமாதானப் படுத்துமாறு ஆரணங்குகள்

சந்திரனை அழகிய கண்ணாடியிலே பிடித்துத் தரவில்லையா ? இத்தகைய நிலை இயல்பாக எங்கும் ஏற்படுவதுண்டு. குழந்தை அம்புலியை ஏதோ ஒரு விளையாட்டுப் பொருளென நினைத்துக் கொள்ளுவான். உடனே, தன் அதிகாரத்திற்கு அடிபணியும் அன்னைக்கு அன்பினால் ஆணையிடுவான். இது மிகவும் சிறிய வயதில் ஏற்படும் மனநிலையாதலால், எளிதில் மாற்றிவிடலாம்.

ஆனால், சற்று நன்றாகத் தெரிந்த வயதில் ஒரு குழந்தை கிடைப்பதற்கு அரிய பொருளைக் கேட்டுவிடும். அடுத்த வீட்டுப் பங்களா அழகானது, சுற்றிலும் பூந்தோட்டம் கண்ணைக் கவரும் நிலையில் இருக்கின்றது என வைத்துக் கொள்ளுவோம். அதைக் கேட்டு குழந்தை அழுதால் என்ன செய்வது ? வறுமையில் வாடி உள்ளம் நைந்து வலியின்மையால் உடலும் சோர்ந்து இருக்கும் அன்னைக்கு முதுகில் இரண்டு வைக்கலாம்போல் தோன்றும். ஆனால், அன்புநீர் சுரந்து கொண்டுதானே இருக்கும் ? தங்கள் வறுமைக்குப் பாவம் பச்சிளங் குழந்தை என்ன செய்யும் ? சாயுங்காலம் வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஒருவாறு சமாதானம் செய்வாள். வழியிருந்தால், ஒரு பொம்மைப் பங்களா வாங்கிக் கொடுப்பாள்.

“என் மாளிகையின் சுவர்கள் வெள்ளியினால் ஆனவை. அதன் விதானம் பொன்னால்

அமைக்கப்பட்டது! ஏழு சுற்றுகளையுடைய மாளிகை யொன்றில் இராணி வசிக்கிறாள். அவள் அணிந்திருக்கும் அந்த ஓர் ஆபரணம் மட்டுமே ஏழு இராஜ்யங்களின் செல்வமனைத்தையும் கொடுத்து வாங்கியது. ஆயினும் அம்மா! அந்த மாளிகை எங்கிருக்கிறதென்பதை உனக்கு மட்டும் இரகசியமாகச் சொல்லுகிறேன், கேள். அதோ திறந்த மாடியில், அந்த மூலையிலே துளசிச் செடி இருக்கின்றது! பார், அங்கே தானிருக்கிறது என் அரச மாளிகை" என்று சொல்லக்கூடிய மன நிலையுடையவர்கள் தாமே அந்தப் பேசும் பொற்சித்திரங்கள். பொம்மைப் பங்களாவை அண்டைப் பங்களாவைவிடப் பெரியதாக எண்ணிக் கொள்ளுவார்கள் அவர்கள். சில குழந்தைகள் அந்தப் பெரிய பங்களா தான் வேண்டும் என்பர். வாங்கித் தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றிவிட முடியுமா? "இனிய மழலையை வாரி இறைத்துக் கொண்டு உன்னைப் பின்தொடர்ந்து வரும் அவனுடைய விசுவாசத்தை இழந்துவிடாதே. நேர்மையான வழியில் நடத்திச் செல்" என்று பெரியார் இரவீந்தரநாத தாகூர் கூறுகிறார். மேலும் "அவனுடைய நல்லெண்ணத்தை இழந்துவிடாதே. ஒன்றுமில்லாதவன் போல் பாசாங்கு காட்டி இவ்வுலகத்தில் வந்து அம்மாவின் அன்புச் செல்வத்தையெல்லாம் அபகரித்துக் கொள்ளுகிறானே, அவனுடைய நல்

லெண்ணத்தை இழந்துவிடக் கூடாது" என்று கூறுகிறார். இதில் எவ்வளவு உண்மையிருக்கிறது! சிறுவயதிலேயே அன்னை அவனுடைய நல்லெண்ணத்தை இழந்துவிட்டால் பிற்காலத்தில் மகனிடமிருந்து அவள் எதை எதிர்பார்க்க முடியும்? அவனுக்கும் எதிலும் யாரிடத்திலும் அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். வாங்கித் தருகிறேன், வாங்கித் தருகிறேன் என்று குழந்தையை ஏமாற்றுதல் நல்ல முறையன்று. அப்படி ஏற்பட்டால் அதற்காக வருந்துதல் வேண்டும்.

"நீ அப்பாவைப் போலப் பெரியவனாகி விடுவாய். அப்பொழுது மாமாவைப் போல் செல்வந்தனாகி ஒரு பெரிய பங்களா அம்மாவிற்குக் கட்டித் தரவேண்டும்" என்று சொல்லிச் சொல்லி அவன் விருப்பத்தை வேறு முறையில் மாற்றிவிட வேண்டும்.

குழந்தை விழுந்து விடுகிறான். பார்க்காதவள் போல் இருந்துவிட்டு, அவன் அழும்பொழுது அன்னை தான் விழுந்துவிட்டதாகவும், தனக்குக் கால் வலிக்கின்றதாகவும் சொல்லுகிறாள் என வைத்துக் கொள்ளுவோம். உடனே, அவன் தன்னை மறந்து, தன் தளிர்க் கரங்களால் தாயின் காலைத் தடவ ஆரம்பிப்பான். தான் விழுந்ததை மறந்து விடுவான். சில பெற்றோர் இம்முறையைக் கையாளுகிறார்கள். இதே நிலையின்தான், குழந்தைக்குப் பங்களா வேண்டும் என்னும் ஆசை





UNIVERSITY EXTENSION L

உண்டாகும்போது, "அம்மா உனக்கு ஏழு கடல் தாண்டி, ஏழு மலைகள் தாண்டி, பச்சை மலையில் ஒரு மாளிகை கட்டித் தருகிறேன்" என்று சொல்ல ஆரம்பிப்பான். அது நல்ல முறையில் அவன் உள்ளத்தை வளர்க்கும். குழந்தைக்கு எப்பொழுதும் தாயின் முகம் சிரிப்போடு இருக்க வேண்டும் என்ற ஆசை உண்டு.

தாகூரின் கற்பனைக் குழந்தை கூறுவதைக் கேளுங்கள் : " அம்மா உனக்குக் குவியல் குவியலாகத் தங்கம் வேண்டுமா? நான் காகிதப் படகில் போகுமிடங்களில் பொன்மயமான ஓடக் கரைகளிலே, வயல்களின் பொன்னிறக் கதிர்கள் ஏராளமா யிருக்கும். காட்டுப் பாதையின் நிழலிலே செண்பக மலர்கள் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் நூற்றுக் கணக்கான கூடைகளிலே நான் உனக்காக அள்ளிச் சுமந்து வருவேன்." " அம்மா ஏழு மன்னர்கள் தங்கள் இராஜ்யங்களையே இழப்பதற்குக் காரணமாயிருந்த அந்த அபூர்வ இரத்தினத்தையும், அதன் பேழையையும்கூட நான் உனக்குக் கொண்டு வருவேன்."

எனவே, குழந்தை தன் தாயின் புன்னகையைப்பெற எவ்வளவு விலைகொடுக்க விரும்புகிறான் என்பதை அறிந்துகொள்ளலாம். இதைப் பயன்படுத்திக்கொண்டு தாய்க்குப் பங்களா கட்டிக் கொடுக்க வேண்டும் என்னும் விருப்பத்தை அவனுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

குழந்தை கேட்கும் பொருள் அந்தக் குழந்தைக்குத் தீமையை யுண்டாக்கும் பொருளாகச் சில சமயத்தில் அமைந்துவிடும். அந்தச் சமயங்களில் நல்ல முறையில் சொல்லிப் பிற பொருட்களைக் கொடுத்து மனத்தை மாற்றுதல் வேண்டும்.

பிறகு தருகிறேன், நாளைக்குத் தருகிறேன், வாங்கித் தருகிறேன், அப்பா கொண்டு வருவார் என்று சொல்லி ஏமாற்றுகின்ற பழக்கம் சற்றும் பயன் தராது. சிறிது பொழுதிற்குத்தான் அது பயன் தருமே அன்றி, குழந்தையின் மனத்தை விட்டகலாது. பிறகு கேட்பான், மறுநாள் கேட்பான், கடையில் கேட்பான், அப்பா வந்தவுடன் கேட்பான். அப்பொழு தெல்லாம் என்ன விடையிறுக்க முடியும்? குழந்தையின் மகிழ்ச்சிக்காக, அவன் நல் வாழ்விற்காக, குணநலன் அவனிடம் அமைவதற்காகப் பெற்ளுேர் தம் சுய தேவையைக் கூட விட்டுக் கொடுக்க நேரிடும்.

குழந்தைக்குச் சமாதானம் சொல்லும்போது அவன் மன நிலையை முதலில் அறிதல் வேண்டும். நாம் கூறும் சமாதானம் அவனைக் கோழையாக்காமல், அவன் உள்ளத்தில் வெறுப்பு ஏற்படுவதற்குக் காரணமா யிராமல், அவன் நல்லெண்ணத்தை இழக்கச் செய்வதாயில்லாமல் அவனுக்கும் பிறருக்கும் மகிழ்ச்சி யூட்டக் கூடியதாக அமைய வேண்டும்.

# 7. நாணமும் மடமும்

"நாணமும் மடமும் நாரியர்க்கு அழகு," என ஒரு பழமொழி வழங்குகிறது. பழமொழிகள் எல்லாம் முற்ற முடிந்த உண்மைகளைக் கூறிவிடுவதாகச் சொல்ல முடியாது. சில பழமொழிகள் அரையுண்மையைக் கூறுகின்றன. இன்னுஞ் சில, காலுண்மையைத்தானும் கூறுவதில்லை. இப்பழமொழி எந்த அளவு உண்மை என்று நோக்குவோம்.

நாணம் என்றவுடனே அது நாரியர்க்கு அழகு என்கிறார்கள். ஆனால், நாணம் ஆடவர்க்கு வேண்டாவோ? அவசியம் வேண்டும் என்று திருவள்ளுவர் போன்ற பெரியவர்கள் வரைந்திருக்கின்றார்கள். 'அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் சான்றோர்க்கு வேண்டும்,' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

அப்படியானுல், நாண் என்பது ஆண் பாலார்க்கும் அவசியம் வேண்டப்படுவதாகும் என்பது வெளியாகவில்லையா ? பின், நாண் என்பது நாரியர்க்கு மாத்திரம் அழகு எனக் கூறுவானேன் ? நாண் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் வேண்டும். ஆடவருக்கானுல், பிறர் பழிக்கத்தக்க செயலைச் செய்யும்பொழுது, அஃதாவது பாவத்தைச் செய்யும் பொழுது, அந்த நாண் வேண்டப்படும் என்பார்கள். அவ்வகை நாண் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொது. ஏனென்ருல், பெண்ணும் பிறராற் பழிக்கத்தக்க—வெறுக்கத்தக்க—செயலைச் செய்யக் கூடாது ஆதலால்.

ஆனுல், பெண்ணுக்கே சிறப்பான நாணம் என ஒன்று மதிக்கப்பட்டு வருகிறது. அதற்கு வரையறை கூறி அதன் இலக்கணம் இயம்புதல் கடினமானது. இன்ன இன்ன இடங்களில் நாண் தோன்றுதல் இயல்பு என்று கூறலாமே தவிர, 'இதுதான் நாண்,' என்று காட்ட முடியாது. புதிதாக ஒருவரைக் கண்டபோது தன்னை மறைத்துக் கொள்ள வேண்டுமென ஒரு வகை உணர்ச்சி தோன்றுவதை நாணம் என்னலாம். நாணம் என்பது மனத்தே தோன்றும் ஓர் உணர்ச்சி. அது காரணமாகச் சொல் தடைப்படலாம். அது காரணமாக உடலிலே ஒரு வகை உணர்ச்சி தோன்றவே, உடல் சிறிது ஒடுங்கினுலும்

ஒடுங்கலாம். இவை உள்ள இடத்து நாண் உண்டு என்பது அறியப்படும்.

“ நாணம் என்பது நாரியர்க்கு அழகு,” என்று கருதிக்கொண்டு எத்தனை பெண்டிர் ஆடவரோடு எக் காரணத்தாலும் உரையாடுதல் இல்லை என்று தீர்மானித்துக்கொண் டிருக்கின்றனர்! உதரரணமாக, நம் வீட்டிற்கு யாரோ ஒருவர் வந்து நம் அகத்தாரைக் குறித்துக் கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். வந்து கேட்டு நிற்பவருக்கு ஒரு சொல் சொல்லாது கதவை அடைத்த வண்ணம் வைத்து நாம் ஓடி ஒளிந்து கொள்வது அழகா? எத்தனை பெண்கள் இப் படிச் செய்கிறார்கள்! “ ஐயா வெளியே போயிருக் கிறார்கள்,” என்று தெரிவித்துவிட்டால் நாண் அழிந்துவிடும் என்று எத்தனை நாரியர்கள் நினைக் கிறார்கள்! நாணத்திற்கு முக்கிய அடையாளம் தலைகுனிந்து கொண்டிருப்பது என்பார்கள். அதற் காகத் தெருவில் நடக்கும் பொழுதுகூடத் தலை யைத் தொங்கப்போட்ட வண்ணம் அக்கம் பக்கம் பாராது நடந்து செல்வதுதான் அழகுபோலும்! உலகில் உள்ள பொருள்களைக் காண்பதற்கு இறைவன் கண் கொடுத்திருக்கக் குருடரைப்போல நடக்க வேண்டும் என்று சொல்வது நேரிது ஆகுமா? மகளிர் நிமிர்ந்து பார்த்து நடப்பதனால் கற்பிழப்பர் என்று நினைத்தால், அதைவிடப்

பெரிய வசை பெண்ணினத்திற்கு வேறு வேண்டா.

நாணம் காரணமாக அக்கம் பக்கம் பார்க்கக் கூடாது என்று கட்டாயப்படுத்தப் படுபவர், பாராததுபோல நடித்து உண்மையிலே பார்த்துச் செல்வது கண்கூடு அன்றோ? உலகிலுள்ள பல பொருள்களையும் கண்ணுற் காணவேண்டும் என்ற இயல்பான விருப்பத்தைக் கட்டாயமாகத் தடைப் படுத்துவதால் பொய் வேடங்கள், நாணத் தோற்றங்கள் பெருகி வந்தன. அவை ஒழிய வேண்டும். இயல்பிலேயே ஒரு பெண் உலகி லுள்ள பொருள்களைக் காண விழையாது கண்ணை மூடிக்கொண்டு நடக்கின்றாள் என்றால் நடந்து செல்லட்டும். ஆனால், 'நாணிலி என்று கூறு வார்களே !' என்னும் அச்சத்தால் அங்ஙனம் செல்வாளாயின், அஃது அழகுடைத்தா என்பதே கேள்வி.

"நாணம் என்பது நாரியர்க்கு அழகு" என்னும் வசனத்தால் வந்த போலிவேடங்கள் ஒழிய வேண்டும். பேசவேண்டிய அவசியம் இருந்தா லன்றி, ஆடவரோடு பேசவேண்டா என ஒரு பெண் நினைப்பாளே யானால், அது குற்றமாகாது. கண்ணகி கூட, சாதாரணமாகப் பிற ஆடவரோடு பேசி யறியாதவள், பேச வேண்டிய அவசியம் ஏற்பட்ட பொழுது அரசன் முன்னிலையிற் சென்று வாதாடினாள். "நாணம் என்பது நாரியர்க்

கழகு," என்பதில் நம்பிக்கைகொண் டிருந்திருப்பாள் ஆனால், தன் கணவன் குற்றவாளி அல்லன் என்பதை நிறுவியிருக்க முடியாது. அன்று அரசன் முன்னிலையில் சென்று வாதாடினதால் அன்றோ இன்றும் அவளை உலகம் கொண்டாடுகிறது! அப்படி யிருக்க, "நாணம் என்பது நாரியர்க்கு அழகு," என்று எப்படிச் சொல்வது?

"நாணம் என்பது நங்கையர்க்கு அணி" என்று கூறினாலும், ஒருவாறு பொருந்தும். அணிகளை வேண்டிய சமயத்தில் அணிந்து கொண்டு, வேண்டாத பொழுது கழற்றி வைத்துக் கொள்ள முடியும். இவ்வாறே, அத்தியாவசியமான இடங்களில் நாணத்தை மேற்கொண்டு, பொருந்தாத இடங்களில் நாணத்தை விலக்கி வைக்க மகளிர் பழகிக்கொள்ள வேண்டும். அப்படி, வேண்டுங்கால் அணிந்து வேண்டாக்கால் நீக்கலாம் ஆதலாற்றான், 'நாணம் என்பது நாரியர்க்கு **அணி**' என்று கூறினேன்.

ஒருவரை அவரது முன்னிலையிலே புகழ்ந்தால், புகழப்பட்டவர் நாணுவது இயல்பு. இஃது இருபாலார்க்கும் ஒத்ததே இதைப் போன்ற நாணம் வேண்டா என யாரும் சொல்லமாட்டார்கள். இந்த நாணம் அழகுடைத்தே. கண்ணகியை ஒரு சமயம் ஒரு வேட்டுவச்சி நிரம்பப் புகழ்ந்தாள். "கொங்கச் செல்வி, குடமலை யாட்டி, ஒருமா

மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி," என்றெல்லாம் அவள் கணவன் கோவலன் முன்னிலையில் சொல்லினான். கண்ணகிக்கு இப்புகழ்ச்சியைப் பொறுக்க முடியவில்லை; நாணினாள்; அதனால், கோவலன் முதுகுப் புறத்திலே மறைந்து கொண்டாள். இதன்கண்ணே நயம் காண்கிறோம்; இதைப் போன்ற நாணம் வேண்டா என்று சொல்ல நான் முன் வரவில்லை.

நாணமே மகளிர்க்கு வேண்டா என்று நான் சொல்லமாட்டேன்; சில சமயங்களில் வேண்டா; சில சமயங்களில் வேண்டும்; வேண்டிய வேண்டாத சமயங்களை அவ்வம் மகளிரே சீர்தூக்கி நிச்சயித்துக் கொள்ளவேண்டும் என்பேன்.

'மடமென்பது மங்கையர்க்கு அழகு,' என்று கூறுகிறார்கள். ஆனால், மடம் என்பதற்கு என்ன பொருள் என்பது பல பேருக்குச் சரியாகத் தெரியாது. மடம் என்பது அறியாமை என்று எத்தனையோ ஆயிரம்பேர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அது தப்பு. மடம் என்பது "கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை" என்பதாகும். மடம் என்பது அறியாமை யன்று. அறிந்தும் அறியாது போன்றிருத்தலே முன்னர் மடம் எனப்பட்டது. இஃது அந்தக் காலத்துக்கு உரிய இலட்சணமாக மதிக்கப்பட்டு வந்தது.

ஆனால், இந்தக் காலத்திலே ஒரு பொருளை அறிந்தும் அறியாது போன்றிருக்க வேண்டும்

என்று கூறினுல், அஃது எவ்வளவு கொடுமை! ஒரு செய்தி தனக்குத் தெரிந்தாலும், தெரியாமல் திக்குமுக்காடுகின்ற ஆடவர் முன்னிலையில் பெண் அதனைத் தெரிவியாது மடமை தாங்கியிருத்தல் வேண்டும் என்பது நியாயம் ஆகுமா? நியாயம் ஆகாது என்ருல், அஃது அழகாகுமா? கல்லா தார் மத்தியில் தன் கல்வியை வீணே காட்ட வேண்டா என்ருல், அஃது ஆடவர்க்கும் மகளிர்க் கும் பொது தானே? அப்படியிருக்க, அறிந்தும் அறியாது போன்றிருக்கும் மடமென்பது ஆட வர்க்கு அழகாகாமல், மகளிர்க்கு மாத்திரம் எப்படி அழகாகும்?

மடம் அழகு என்ருல், அஃது ஆடவர்க்கும் அழகுதான்; பெண்டிர்க்கும் அழகுதான். இவ் வாறு பார்த்ததில், இந்தப் பழமொழி அரை யுண்மையைக்கூடச் சரியாகக் கூறவில்லை என்பது பெறப்படும்.

# 8. இல்லறம்

பழந் தமிழ்நாட்டில் காதல் மணமே பெரும் பாலும் நடைபெற்றது. ஆடவனும் பெண்ணும் தான்தான் காதலித்தவரையே பெரும்பாலும் மணந்துகொண்டார்கள். தலைவி தன் காதலைத் தோழி வழியாக வெளிப்படுத்தித் தாய் தந்தை யரை இசையும்படி செய்ததே பெரும்பான்மை.

அவ்வாறு காதலிக்கப்பட்டவனை மணந்த பிற்பாடு, தலைவி தலைவனோடு கூடி அவனுடன் இல்லத்திலிருந்து ஒழுகிய விதமே இல்லறம் எனப்படும். மனையிலிருந்து செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்ததைக் குறிப்பிடு வதே "மனையறம்" என்பதன் கருத்தாகும். தன் கணவனிடத்துச் செலுத்த வேண்டிய பேரன் பினைச் செலுத்துதல் இல்லறத்தின் பண்பு; விருந் தினரை உபசரித்துப் பொருளற்றவர்களுக்கு

வழங்கி வாழ்தலே இல்லறத்தின் பயன். இதனைத் திருவள்ளுவர் "இல்வாழ்க்கை" என்ற அதிகாரத்தில் அழகாகக் காட்டியுள்ளார். அதனால்தான், "அறன் எனப் பட்டதே இல் வாழ்க்கை" என்றும் கூறியுள்ளார். இல்லறத்தில் ஈடுபடுகின்ற பெண் நற்குணங்களும் நற் செயல்களும் உடையவளாய் இருத்தல் வேண்டும் என்று பழந் தமிழர் கருதினர்; அன்றியும், கணவனுடைய வருவாய்க்கு உட்பட்ட விதத்திலேயே வாழ்க்கையை நடத்தக் கூடியவளாய் இருக்க வேண்டும் என்றும் நம்பினர். தன் கற்பைப் பாதுகாத்துக் கொண்டும், தன் கணவனுக்கு உண்டி முதலியன விரும்பித் தந்து அவனைப் பாதுகாத்துக் கொண்டும், புகழுக்குரிய செயல்களைச் செய்துகொண்டும் வாழ்கின்ற பெண்ணே இல்லறஞ் செய்யும் பெண்டிருட் சிறந்தவள் ஆவாள். இப்பழந் தமிழர் கொள்கை இக்காலத்திற்கும் பொருந்துவதேயாம்.

மனைவி, இல்லாள் என்ற தமிழ்ச் சொற்களை நோக்கினால், ஓர் உண்மை புலனாகிறது. வீட்டிற்கு உரிய எல்லாச் செயல்களையும் நன்றாகக் கவனித்துச் செய்து இல்லறத்தின் மாண்பினை உயர்த்தக் கூடியவள் பெண்தான் என்பது இச் சொற்களால் விளங்குகிறது. இவற்றிற்கு ஏற்ப, மனைவன் என்றோ இல்லான் என்றோ கணவனைக் குறிக்கச் சொற்கள் இல்லாமையே பெண்ணின்

பெருமையைக் காட்டப் போதியன ஆம். இன்ப உரைகள் தருவதாலும், வீட்டை இனிய நகைப் பால் ஒளி செய்வதாலும், பிற கடமைகளை முடித் திடுவதாலும்,

"மங்கைய ராகப் பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா"

என்று கவிமணியும் கூறுகிறார். மனைவியை மனைக்கு விளக்கு எனவே போற்றினார்கள்.

அங்ஙனம் இருப்பவும், ஆண் குழந்தை களையே மக்கள் போற்றினர் எனவும், பெண் குழந்தைகளைப் பெறுதலைக் குறைவாகவே மக்கள் மதித்தனர் எனவும் கூறுவது பழந்தமிழர் விஷ யத்திற் பொருந்தாது. மலையில் வாழ்ந்த பழந் தமிழர்கள் கடவுளை வேண்டிப் பெண்களைப் பெற்றனர் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

இல்லறத்தைச் சிறப்பாக நடத்துதற்குத் தலைப் படும் மகளிருக்கும் ஆடவருக்கும் நடைபெற்ற திரு மணங்களின் முறையைச் சற்றுக் கவனிப்போம். திருமணம் பெரும்பாலும் பெண் வீட்டில் நடை பெறும். வீட்டின் வாசலிற் பந்தல் போட்டிருப் பார்கள். பந்தலிற் புது மணல் பரப்பியிருப்பார்கள்; பூமாலைகள் தொங்கவிட்டிருப்பார்கள். இன்னும் பலவிதத்தில் மணவீடு புனையப்பட்டிருக்கும். கடவுள் வழிபாடு செய்து கன்னிக்கு நீராட்டு நடத்துவார்கள். மக்களைப் பெற்ற நான்கு மாதர்கள்

பெண்ணைச் சுற்றி நின்றுகொண்டு, பூவும் நீரும் நெல்லோடு சொரிவார்கள்.

" கணவனுக்கு விருப்பம் தரும் பெண்ணாகுக " என வாழ்த்துவார்கள். ஆடவரும் கூட்டமாய் வந்து " பெரிய இல்லறச் செல்வி ஆகுக " என வாழ்த்துவார்கள். அன்றிரவே முழுமணம் ஆகி விடும். மணநாள் அன்றும், முன்னும் பின்னும் பெரு விருந்துகள் நடைபெறும். நெய் நிறைந்த சோறும், கும்மாயம் எனச் சொல்லப்படும் உளுந்துக் களியும் சிறந்த உண்டிகள். இம் மணவினைச் செய்திகள் அகநானூற்றுப் பாடல்கள் சிலவற்றால் அறியப்படுகின்றன.

செல்வ மகளிரானாலும், கணவனுக்குச் சமைத்துப்போட்டு மகிழ்விக்கின்ற பெற்றியுடையவர் பழந்தமிழ் நாட்டுப் பெண்டிர். செல்வ மகளாகிய கண்ணகி கோவலனுக்குத் தானே சமைத்துச் சோறுபடைத்த காரணத்தால் அவனுடைய அன்பிற்கு மீண்டும் பாத்திரம் ஆகினாள் என்பதும், அவளுடைய பேரன்பு காரணமாக அவன் உள்ளம் நெகிழ்ந்து உருகினான் என்பதும் சிலப்பதிகாரத்தால் அறியப்படுஞ் செய்திகள். மோர்க் குழம்பு தன் கையாலேயே வைத்துக் கணவனை மகிழ்வூட்டிய பெண்ணின் திறத்தைக் கூடலூர் கிழார் என்பவர் கூறியுள்ளார்.

சிறந்த பட்டாடையை உடுத்தியிருந்த ஒரு பெண் அடுப்பகத்தில், தன் கையினால் தயிரைப்

பிசைந்து தாளித்துத் துழாவிச் சமைத்த தயிர்க் குழம்பை அவளுடைய கணவன் இனிதாயிருக் கிறது என்று சொல்லி உண்டான் என்பதும் அது கண்டு அவள் அகமும் முகமும் மலர்ந்தாள் என்பதும் குறுந்தொகைப் பாட்டால் அறியப் படுஞ் செய்திகள்.

கணவன் வறியனாய்விட்டால், அதற்காகத் தாய்வீடு செல்ல வேண்டும் என்று நினைத்தவர் அல்லர் அக்கால மகளிர். தாய் வீட்டில் தேனும் பாலும் பிற இனிய பொருள்களும் நிரம்ப இருக்கின்றன என்பதாலும், கணவன் வீட்டில் உப்புத் தண்ணீரும் சேற்றுநீருந் தான் உள என்பதாலும், புக்ககத்தை விட்டுவிட்டுப் பிறந் தகத்துக்குப் போய்விட மாட்டார் அக்கால மகளிர். இது ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்றால் அறியப் படுகிறது.

அக்காலத்தில் வாழ்ந்த ஆடவரிற் பலர் தாம் தாம் மணந்துகொண்ட பெண்ணிடத்துப் பேரன்புடையவராய் அவளை நடத்தினர்; அவளை மிருகமென மதித்து அவமதித்தார் அல்லர். மனைவியைக் கணவன் அடித்தான் என்பதற்குச் சங்க காலச் செய்யுளில் ஆதாரமே கிடையாது. கூந்தல் நரைத்தாலும், குறுமேனி திரைத்தாலும், மனைவியைக் கைவிடலாகாது என்பதைப் பல ஆடவர் அறிந்திருந்தனர். அதைப்போலவே,

மகளிரும் கொண்ட கணவனுடைய இன்பமே தம் இன்பம், அவனுடைய துன்பமே தம் துன்பம் என மதித்து ஒன்றிய வாழ்க்கையுடையவராய் இருந்தார்கள். கண்ணகியும் கோவலனும் புகாரை விட்டு மதுரைக்குப் போகிறார்கள். வழியில் சூரிய வெப்பத்தால் கண்ணகிக்குக் கால் கொப்புளிக்கிறது. அந்த நிலையிலும், அவள் கணவனுடைய கால் நொந்துபோமோ என வருந்தியதாகவே காட்டப்படுகிறாள்.

வீட்டின் வெளியிலே போய், அலுவல் பலவற்றுள் ஈடுபடும் ஆடவர் அல்லலும் அவதியும் உற்று வீடு திரும்பும்போது, அவர்க்கு மேலும் துன்பந் தராமல், இனிய முகத்தைக் காட்டி வரவேற்கும் தன்மை உடையவராகவே அக்காலத்து மகளிர் வாழ்ந்தனர் என நக்கீரர் போன்றவர் நவின்றுள்ளார்கள். இதனால்தான், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும்,

"அன்பினுக்காகவே வாழ்பவர் யார் ?—அன்பினால்
ஆவியும் போக்கத் துணிபவர் யார் ?
இன்ப உரைகள் தருபவர் யார் ?—வீட்டை
இன்னகையால் ஒளிசெய்பவர் யார் ?"

என வினவி, மகளிர் என விடை தந்துள்ளார்.

அக்காலப் பெண்கள் உரிய வேளையில் கடவுளை வழிபட்டிருக்கிறார்களென அறிகிறோம்.

தாம் தாம் விரும்பிய ஒரு தலைவனையே மணம் புரிந்து கொள்ளும்படி அருளவேண்டும் எனக் கன்னியர்கள் கடவுளை வேண்டிக் கொண்டார்கள் என்பது ஐங்குறுநூற்றால் தெரிகிறது. மதுரையில் வாழ்ந்த மகளிர் தம் கணவரோடும் குழந்தைக களோடும் பூவும் புகையும் எடுத்துக்கொண்டு, கோயிலுக்குச் சென்று, கடவுளைத் தொழுதனர் என மதுரைக் காஞ்சி கூறுகிறது. திருப்பரங் குன்றத்தில் உள்ள முருகக்கடவுளை வழிபட்ட பெண்கள் சிலர் தத்தம் கணவர் ஈடுபட்டுள்ள செயல்களில் வெற்றி பெறுவாராக என வேண்டிக் கொண்டதாகப் பரிபாடல் பகரும்.

பழந்தமிழ்நாட்டு மகளிர் விளையாட்டில் மிக்க விருப்பமுடையவர் என அறிகிறோம். பந்தாடுதல், ஊஞ்சலில் உயர ஆடுதல், கழற்சிக்காய் ஆடுதல் முதலியவற்றுள் அவர்களுக்கு மிக்க விருப்பம். அன்றியும், தம் குழந்தைகளிடம் நடை வண்டியைக் கொடுத்து அவர்களை நடக்கப் பழக்குவார்கள் ; பவளச் சக்கரத்தோடு செய்யப் பட்ட மரயானையை ஒரு பக்கம் விட்டு, குழந்தை யைப் பார்த்து "இங்கே இழுத்துவா" என் பார்கள். குழந்தைகளைக் கொண்டுபோய்த் தெருவில் விளையாடி வருக எனத் தோழியரை விடுப்பர். அவர் திரும்பிவர நேரமானால், இன்னும் வர வில்லையே எனக் கவல்வர்.

நண்டைப் பிடித்து ஆட்டுவது அக்கால மகளிருக்கு ஒரு பொழுது போக்காக இருந்தது. குரவைக் கூத்தும் துணங்கைக் கூத்தும் அவர்கள் ஆடிய ஆடல்கள். குரவை என்பது மகளிர் கைகோத்து ஆடும் கூத்து. துணங்கை என்பது இரு கையையும் முடக்கி அடித்துக்கொண்டு ஆடும் கூத்து. இளையவர்களாக உள்ள பெண்கள் விளையாடுகின்ற தம்மை யொத்த பெண்களோடு கூடி விளையாடாமல் வீட்டிலே அடங்கிக் கிடத்தல் அறன் அன்று ; அதனால் ஆக்கமும் தேயும் என்று கூறக் கூடிய துணிவுடையவராய் அக்கால மகளிர் இருந்தனர் என்பதற்கு நற்றிணைப் பாடல் ஒன்று ஆதாரம்.

அக்காலத்துத் தமிழ் மகளிர் தமது குழந்தைகளுக்கு இனிய தீந்தமிழைக் கற்பித்தார்கள் ; கற்பித்தவற்றைத் திரும்பச் சொல்லச் செய்து மகிழ்ந்தார்கள் ; தந்தையுடைய முகம் எப்படியிருக்கிறது, பாட்டியுடைய முகம் எப்படி யிருக்கிறது எனக் குழந்தைகளை முகம் காட்டும்படி சொல்லி மகிழ்ந்தார்கள் ; அற வழியிலே நடக்க வேண்டும், அற்றார்க்கு ஒன்று ஆற்றுதல் வேண்டும், வீரத்தோடு வாழ்தல் வேண்டும் என்று குழந்தைகளுக்கு அடிக்கடி அறிவுறுத்தினார்கள்.

இவ்வாறு நடைபெற்ற பழந்தமிழ் நாட்டு இல்லறம் இனிய நல்லறம் என்பதில் ஐயமுண்டோ ?



## 9. ஓவியக் கலையும் மன அமைதியும்

ஓவியக் கலையில் மன அமைதி காண முடியுமா என்று நீங்கள் கேட்கலாம். ஆம் என்று தயங்காமல் கூற ஆசைப்படுகிறேன். உங்கள் வீட்டின் ஒரு சிறிய பாகத்தைச் சித்திரக் கூடமாக வைத்துப் பாருங்கள். அப்பொழுது தெரியும், உங்களுக்கு ஓவியம் மன அமைதி தருகிறதா இல்லையா என்பது. சித்திரக்கூடம் என்று கூறினால் கடைகளிலிருந்து சித்திரங்களை வாங்கி வைக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. நீங்களே உங்களுடைய மன நிலைக்கு ஏற்றவாறு எழுதிக் கொள்ளலாம். நீங்கள் அரசியலில் ஈடுபட்டிருந் தால் அரசியல் தலைவர்களின் படங்களை எழுத லாம். அன்றி, இலக்கிய சம்பந்தமான சித்திரங் களையும், நாட்டின் சீர்கேடான நிலைபற்றிய

சித்திரங்களையும், நாடு செழிப்புடன் இருந்தால் எப்படி இருக்குமென்று காட்டக் கூடியவற்றையும் படங்களின் மூலமாகவே உங்களுக்கு உகந்த வகையில் வரைந்தால் நன்றாயிருக்கும்.

இலக்கியத்தை எடுத்துக் கொண்டால், உங்களுக்கு எந்தக் காட்சியை எழுதத்தோன்று கிறதோ, அந்தக் காட்சியை எழுதி மன அமைதியைக் காணலாம். காதல் கவர்ச்சியை எழுப்பும் வீர ரசத்தைப் பற்றி எழுதலாம், உவகைச் சுவையைப் பற்றி எழுதலாம். அரசியலை எடுத்துக்கொண் டால், அரசியல் தலைவர்கள் என்ன என்ன தொண்டு செய்தார்கள், அந்தத் தொண்டுகளின் பலன் என்ன என்று காட்டுமாறு எழுதலாம். உதாரண மாக, மதுவிலக்கு செயலுக்கு வருவதற்குமுன் ஏழைக் குடும்பங்கள் எப்படி இருந்தன, பின் எப்படி இருக்கின்றன என்று எழுதி உங்கள் சித்திரக் கூடத்தை அலங்கரிக்கலாம். கிராமமாக இருந்தால், வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை கிராமப்பள்ளியிலோ பொதுக் கண்காட்சி யிலோ அச்சித்திரங்களைப் பொதுமக்கள் பார்த்து அறிவை அடையும் பொருட்டுப் பயன் படுத்த லாமே! இதைத் தவிர, பெண்மணிகளுக்குகந்த ரசிக்கத் தக்க வேடிக்கையான முறைகளில் எழுத லாம். சமையல் செய்வது போலவும், தாய் குழந்தை களுக்குக் கதை சொல்வது போலவும், விளையாட்டுக் காட்டுவது போலவும் அனேகச் சித்திரங்கள்

எழுதலாம். இயற்கைக் காட்சிகளை எடுத்துக் கொண்டால் எத்தனையோ வகைகளில் எழுதலாம். ஒரு வாய்க்காலில் ஒரு பெண் குளிப்பது போலவும், அவளுடன் ஓர் இளைஞன் காதல் பேச்சுப் பேசுவது போலவும், மாலை நேரத்தில் குன்றின் உச்சியில் நின்றுகொண்டு சூரியனின் பொன்னிறத்தைப் பருகிக் கொண்டிருக்கும் கலைஞனைப் போலவும், ஓர் ஏழை உழவன் வயலில் வேலை செய்யும் நேரத்தில் அருமைத் தலைவி தன் தலையில் ஒரு பானை நிறையக் கஞ்சியும் இரண்டு சுட்ட மிளகாயும் கொண்டு வருவதைப் பார்த்து மகிழும் அவனுடைய முகத்தைப் போலவும் எழுதலாம். நம் நாட்டின் இயற்கை வளங்களை நம்மிற் பலர் கூர்ந்து கவனிப்பதில்லை. வானில் உள்ள காட்சிகளை வரைவதற்கு நமக்கு எத்தனை சந்தர்ப்பங்கள் உள? ஆனால், மேனாடுகளில் இருந்து வருகின்ற பலர் களங்கமில்லா வானத்தைக் காண்பதே அவர் நாட்டில் அரிதாக இருப்பதால் நம் நாட்டு விண்ணிடைக் காட்சிகளைக் கண்டு வியக்கிறார்கள். உதாரணமாக, எங்கள் ஊருக்கு அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் ஓர் ஆசிரியரின் மனைவியைப் பார்த்து என் சிநேகிதி "உங்களுக்கு இந்நாடு பிடித்திருக்கிறதா?" என்று கேட்டதற்கு அவர் என்ன பதில் இறுத்தார் என்பது தெரியுமா? "ஆம், நன்றாகப் பிடித்திருக்கிறது. ஏனென்றால், எங்கள் நாட்டில் வானத்தையும் அதன் அழகையும்

பார்க்க முடியாது. இங்கோ எப்பொழுதும் பார்த்து அனுபவிக்கலாமே" என்று அவர் பதில் கொடுத்தார். ஆகாசத்தில் தோன்றும் பல்வேறு காட்சிகள் நம்மால் மகிழ்ந்து வரையத்தக்கனவாக உள.

பயிலாமல் இச்சித்திரங்கள் எப்படி வரையலாம் என்று நீங்கள் யோசிக்கலாம். நீங்கள் வேலையில்லாமல் இருக்கும் நேரத்தில் யோசனை செய்தால் எப்படி வரைந்தால் எப்படி இருக்கும் என்று உங்களுக்கே கற்பனையில் தோன்றலாம். நீங்களே உங்கள் மனத்துக்கு ஏற்ற படங்களை எழுதி உங்கள் இல்லத்தில் வைப்பீர்களானால், உங்களுடைய மன அமைதிக்கும் சந்தோஷத்திற்கும் எல்லையற்ற வகையில் இருக்கும் என்று சொல்ல நான் தயங்கவே மாட்டேன். நீங்கள் ஆங்கிலத்தில் வரும் செய்தித் தாள்களில் காண்பதைப் போலச் சில தமிழ்பத்திரிகைகளிலும் தொடர்ச்சியாகக் கதைகள் சித்திர மூலமாகவே வெளிவருகின்றன என்பதை அறிவீர்கள். அதுபோல், 'நீங்கள் உங்களுடைய கற்பனைக்கு ஏற்றவாறு வேடிக்கையாகத் தினசரி உங்கள் வீட்டில் நடக்கிறதை வரைந்தால் கற்பனைக் கதையாக மாறிவிடும். அப்படியேதான் எழுதவேண்டும் என்று இல்லை. கொஞ்சம் மாறுதல் இருக்கலாம். நீங்கள் பயந்து விடாதீர்கள், நமது வீட்டைப்பற்றி எழுதுவதா என்று நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து எப்படிச் சில சமயம் வைரம் கிடைக்கிறதோ, அப்படி உங்கள் வீட்டு வாழ்க்கை

யில் அற்புதமான ஓர் எடுத்துக்காட்டு அல்லது உதாரணம் கிடைக்கலாம். இதே மாதிரிதான் காந்தியடிகளின் தினசரி வாழ்க்கையில் குப்பைகளை எடுப்பது போலவும் கக்கூசைச் சுத்தப்படுத்துவது போலவும் படங்கள் வெளிவந்திருக்கின்றன. இப்பொழுது சமீபத்தில் கூட பாலு சகோதரர்கள் காந்தியடிகள் ஒரு குஷ்டரோகிக்குச் சேவை செய்வதுபோல் மிக அழகாக எழுதி முதற் பரிசு பெற்றிருக்கின்றனர். இதேபோன்று நம் நாட்டில் உள்ளே பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு களில் முக்கியமான பகுதிகளை எழுதலாம். அவர்கள் எல்லோரும் செல்வச் சீமான்களாகப் பிறந்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம் அவர்களில் சிலருடைய சிறுவயதுக் கஷ்டங்களையும், பிறகு எப்படி அவர்கள் உயர்ந்த நிலைமைக்கு வந்தார்கள் என்பதையும் சித்திரங்களாக வரைந் தால் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மிக்க உதவியாக இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. ஒழுக்கம் குன்றிய ஒரு மாணவ ஞேடு சேர்ந்து நல்ல மாணவன் ஒருவன் எப்படிக் கெட்டுவிடுகிருன் என்பதை எத்தனையோ உதார ணங்களிஞல் விளக்கலாம். அதேபோன்று மாணவிகளுக்கும் சித்திரங்கள் வரைந்து புத்தி புகட்டலாம்.

சித்திரம் வரைகிறவர்கள் மக்களுடைய உடற் கூறுபற்றி அறிந்திருப்பது நல்லது. ஏனென்ருல்,

அப்பொழுதுதான் ஒரு மனித உருவத்தின் வெளித் தோற்றத்தை நன்றாக வரைய முடியும். உடம்பின் உள்ளே எந்த இடத்தில் எவ்வகையான நரம்புகள் இருக்கின்றன, எந்த இடத்தில் எவ்வகையான எலும்புகள் இருகின்றன, எந்த இடத்தில் சதை இருக்கின்றது, எங்கே சதை நார்கள் இருக்கின்றன என்ற அறிவு இருந்தால் தான் ஓவியம் நன்றாக அமையும். ஆனால், ஓவியக் கலையை உடற்கூற்றறிவு மிஞ்சிப் பாழாக்கி விடாமற் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சித்திரக்கலைக்குப் பரிணாமம் அடிப்படையாக வேண்டப்படும். எந்த உடம்புக்கு எவ்வளவு பெரிய கால் இருக்கலாம், எவ்வுடம்புக்கு எவ்வளவு பெரிய தலை இருக்கலாம் என்ற அள வுணர்ச்சி அவசியம் வேண்டும். ஓர் உறுப்பை உறுப்பொடு ஒப்பிட்டுப் பார்த்தே பரிணாமம் நிச்சயிக்கப் படும். அதனால், ஏதாவது ஓர் அளவு கோல் நமக்கு வேண்டியதாக இருக்கிறது. அதற்காக, அங்குல நாடாவையோ மட்டப் பலகையையோ கைக்கொள்ளக் கூடாது. மற்று, அளவுக்குரிய சிற்றெல்லையாக ஒரு "தலை" என் பதைக் கைக்கொள்ளலாம். "தலை" அளவு என்பது மண்டை யோட்டின் உச்சியிலிருந்து ஒருவரது முகவாய்க் கட்டை நுனிவரையில் உள்ள பகுதி. சாதாரணமாக, ஒருவர் நேரே நின்றால் ஏழரைத் "தலை" அளவு அவர் உருவம் இருக்கும்.

நிரம்ப உயரமான ஆட்கள் எட்டுத் "தலை" அளவு இருப்பார்கள். கொஞ்சம் குட்டையான ஆட்களின் வடிவு ஏழு "தலை" அளவுதான் இருக்கும். வயது முதிர்ந்து விட்டால், குருத்தெலும்புகள் கடினமாகிச் சுருங்கிவிடுவதால், வயது முதிர்ந்த கிழவர்களுடைய வடிவத்தின் உயரத்தில் கொஞ்சம் குறைத்துத்தான் படம் வரைய வேண்டும். அல்லாது போனால், கிழட்டுத்தனத்தை நன்றாகக் காட்ட முடியாது.

"பொதுவாக, மக்கள் வடிவுக்கு ஏழரைத் "தலை" அளவு உண்டு என்றதை, தலையைக் காட்ட ஒரு "தலை" அளவும், கழுத்தையும் உடம்பையும் காட்ட இரண்டேமுக்கால் "தலை" அளவும், அரைக்குக் கீழே உள்ள பாகத்தைக் காட்ட மூன்றே முக்கால் "தலை" அளவும் எனக் கொள்ளுதல் தக்கது. ஆனால், ஆண்கள் வடிவத்திலும் பெண்கள் வடிவத்திலும் சிறிதளவுவேறுபாடுகள் உண்டு. அவற்றையும் உணர்ந்து கொள்வது நல்லது. சாதாரணமாக, ஆண்களுடைய முழங்கையிலிருந்து விரல் நுனிவரை இரண்டு "தலை" அளவு எனக் கொள்ளலாம். ஆனால், பெண்களுக்கு இந்த அளவு சிறிது கூடுதலாக இருக்கும். இந்தக் காரணத்தால் பெண்களுடைய புஜங்கள் ஆண்களுடைய புஜங்களை விடக் கொஞ்சம் குட்டையாகத்தான் இருக்கும். தோள்பட்டைக்குச் சற்றுக் கீழே காணப்படும் இடம்தான் ஆண்க

ளுடைய வடிவத்தில் மிகவும் அகலமான பாகம். பெண்களுக்கோ பிரஷ்ட பாகத்தில் அதிக சதை இருப்பதால், அந்தப் பாகத்தின் விட்டம் (diameter) ஆடவர்களுடையதைவிட மிக்கதாக இருக்கும். பெண்களுடைய முதுகுப் பட்டை ஆடவருடையதைவிடக் குறுக்கமானது. ஆனால், அவர்களுடைய காறை யெலும்புகள் (collar bones) ஆடவர்களுடையவற்றைவிட நேராகவும் சிறியன ஆகவும் இருக்கும். அதனால், மகளிருடைய கழுத்துக்கள் இன்னும் அழகாகவும் இன்னும் நீளமாகவும் இருக்கின்றன. ஆடவர் தோள்பாகம் சதுரமாக இருப்பது போலத் தோன்றும்; பெண்களின் தோள்பாகமோ சிறிது சரிவாக இருப்பது போலத் தோன்றும். இவற்றைப் படம் எழுதும் போது ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

மேலும், பொதுவாகப் பெண்களுடைய எலும்புகள் ஆடவர் எலும்புகளை விட நீளக் குறைவாக இருக்கும். ஆனால் பெண்களுடைய இடுப்பெலும்பு ஆடவருடையதைவிட அகலமாக இருக்கும். இந்தக் காரணத்தினால், பெண்களுடைய விலா வெலும்புக்கும் இடுப்பெலும் பிற்கும் இடையே உள்ள தூரம் சற்று அதிகம். சாதாரணமாக, ஆடவர் கால்களைவிட மகளிர் கால்கள் சிறிதளவு நீளத்தில் குறைந்தனவே; மகளிர் மண்டையோடும் சிறதளவு சின்னதே. பெண்களுடைய வயிறு ஏனையவருடைய வயிற்றை

விடக் கொஞ்சம் வட்டமாக இருக்கும். தொடைகளும் கொஞ்சம் கூடுதலான சதையுடையதாகவே இருக்கும். மகளிர் வடிவத்தின் நடுப்பாகம் இடுப்பெலும்பின் மேலே உள்ளது. ஆடவருடைய வடிவத்தின் மத்திய பாகம் இடுப்பெலும்பை ஒட்டி இருக்கிறது.

இன்னொரு செய்தி என்ன என்றால், பெண்களில் ஒருவர்க்கு இருப்பது போலவே மற்றொருவர்க்குக் காலளவு இருக்காது என்பது. உடலை விடக் காலைப் பற்றிய வரையில் பெண்ணுக்குப் பெண் வித்தியாசம் உண்டு. அதனால், ஒரு பெண் உட்கார்ந்திருப்பதாகப் படம் வரைவதாய் இருந்தால், அவளுடைய காலைப் பற்றிய அளவினைச் சற்று யோசித்து நிதானமாகவே முடிவு செய்ய வேண்டும். இந்தப் பரிணாமங்கள் இந்தியர்களிடம் ஒருவிதமாகவும், வெள்ளையரிடம் வேறு விதமாகவும், நீகிரோவரிடம் வேறு விதமாகவும் காணப் படலாம். அன்றியும், ஒவ்வொரு தனிப்பட்ட ஆளினுடைய உடலமைப்பு விநோதங்களுக்கு ஏற்ப இவை வேறுபடலாம். நான் இங்கே கூறியது பொதுவாக அமைந்த சாதாரண மக்களுடைய வடிவங்களைப் பற்றியதே. மேலும், குழந்தைகளுடைய வடிவத்திற்கும் பெரியவர் வடிவத்திற்கும் வேறுபாடுகள் இருக்கின்றன. சாதாரணமாக இருபத்தைந்து வயதில்தான் முற்ற முடிந்த வடிவம் அமைகிறது. பொதுவாகச்

சொல்லப்போனல், மூன்று வயதுக் குழந்தைக்கு $3\frac{3}{4}$ அல்லது நாலு "தலை" அளவு வடிவம் தரலாம். பத்து வயதுக் குழந்தைக்கு $5\frac{1}{2}$ அல்லது $5\frac{3}{4}$ "தலை" அளவு வடிவம் தரலாம்.

படம் வரைய முற்படுபவர்கள் இவற்றை மனத்தில் வைத்துக்கொண்டு, இவற்றிற்கு ஏற்ப வரைந்தால் பாராட்டப் படுவார்கள். இத்தகைய ஓவியங்களை வரைவதாலும் காண்பதாலும் மன அமைதியும் மனமகிழ்ச்சியும் உண்டாகின்றன.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS.

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI